# முத்தமிழ் கலசம்

ISSN 2719 - 2520

இருமாதத்திற்கொருமுறை

மார்ச் - ஏப்ரல் 2023

ஆண்டு 3 ▲ இதழ் 05

விலை : 200 / -

## மகளிர் சிறப்பிதழ்



தமிழ்நெஞ்சங்களே வணக்கம்.

அன்பான வாசகர்கள் தமிழ்நெஞ்சம் இணையத்திலிருந்து தரவிறக்கம் செய்து படிக்கலாம்.

எழுத்தாளர்கள், கவிஞர்கள், கட்டுரையாளர்கள் தங்களின் ஆக்கங்களை மின்னஞ்சல் வழி அனுப்பித் தாருங்கள்.

இதழ் ஒவ்வொரு மாதமும் முதலாம் வாரத்தில் வெளியிடப்படுகிறது.

இதழைப்படிப்பதுடன் நில்லாமல் இதழ் பற்றியக் கருத்துகளையும் பதியும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

https://tamilnenjam.com

editor@tamilnenjam.com



# முத்தமிழ் கலசம்



இருமாதத்திற்கொருமுறை
மார்ச் - ஏப்ரல் 2023
ஆண்டு 3 ▲ இதழ் 05

ஆசிரியர் : சித்தி வஃபீரா
editor & publisher : Sithy Wafeera

கௌரவ ஆசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்
Hon. editor : Tamilnenjam Amine

படைப்புகளின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.

படைப்புக்கள் அனுப்பவேண்டிய முகவரி:

email :
muththamizh.kalasam@gmail.com

The editor of “Muththamizh kalasam”,

23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka

எழுதுகோலின் கூர்முனை கொண்டு
நல்லவை விதைப்போம். அல்லவை புதைப்போம்

# ஆசிரியர் பக்கம்

(இந்த இதழின் புத்தக வெற்றியாளர்களை அடுத்த இதழில் அறிவிப்போம்)

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்!

காலம் மற்றும் அனுபவங்களைப் போல் சிறந்த ஆசான்கள் எவருமில்லை. ஆகவே, காலம் தரும் அனுபவப் பாடங்களைக் கற்று, வாழ்க்கையில் உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வது அவசியமாகிறது. தவிர்க்கவியலாத சில காரணங்களால் இந்த மகளிர் சிறப்பிதழ் சற்று தாமதமாகவே உங்களை வந்து சேர்ந்துள்ளது.

மகளிர் என்றாலே எதையும் தாங்கக்கூடிய மனவலிமை பெற்றவர்கள். அவர்களைக் கொண்டாட ஒரு தினம் ஒதுக்கப் பட்டிருந்தாலும் அவர்கள் பாரிய சவால்களை எதிர்கொள்டு போராடி வருபவர்கள். அதிலும் சில பெண்களே பெண்களை இழிவு படுத்தும் சந்தர்ப்பங்களையும் நாம் அவதானித்திருப்போம். அவர்களின் தாக்குதல் சில நேரங்களில் மறைமுகமாகவும் இருக்கும். நட்பிலும் உறவிலும் பலருக்கிடையில் புரிந்துணர்வின்மையை ஏற்படுத்தி பாரிய விரிசல்களுக்கும் வழிகோலும். அதனால் அவர்களை அடையாளம் கண்டு தவிர்த்து விட்டுக் கடந்து செல்வது, அவசியமற்ற பிரச்சினைகள், மன அழுத்தங்கள் போன்றவற்றில் இருந்து நம்மைப் பாதுகாக்கும்.

வலிகள்,தடைகள்,எதிர்ப்புகளைத் தாண்டி சாதனைகள் புரிபவர்கள் பெண்கள். விதிவிலக்காக மேற்குறிப்பிட்ட ரீதியில் சிலர் இருப்பதும் வியப்பில்லை. முன்னேற்றப் பாதையில் விமர்சனங்கள் வருவது இயல்பே! அதைக் கருத்திற் கொள்ளாமல் புறந்தள்ளி எம் இலக்கை நோக்கிப் பயணிப்பதே அறிவுபூர்வமானது. அதுவே வெற்றிகளைத் தரக்கூடியது.

‘‘உட்கார முடியாத ஒருவன் உன் நாற்காலியை ஒளித்து வைத்திருப்பான். தேடிக் கைப்பற்று’’ - கவிப்பேரரசு வைரமுத்து

அனைவருக்கும் நல்வாழ்த்துகள்!

- சித்தி வ.ஃபிரா
ஆசிரியர்

# அம்மாக்களின் ஏக்கம்

ஒரு கணவனும் மனைவியும் ஹோட்டல் ஒன்றில் ஐஸ்கிரீம் சாப்பிட உட்கார்ந்தார்கள். மனைவி “என்னஙக... உங்ககிட்ட ஒரு விஷயம் கேட்கணும்போலஇருக்குகேட்கவா?” என்று சொல்ல,”இதென்ன புதுசா?.. என்கிட்ட கேட்டா பேசுவாய்... கேளு” என சிரிச்சான் கணவன்.

“இல்ல, ஒரு மாசமா சீக்கிரம் வீட்டுக்கு வரீங்க... அடிக்கடி வெளிய கூட்டிப்போறீங்க.. பொண்ணு கூட உட்கார்ந்து பாடம் சொல்லி குடுக்றீங்க. திடீரென நம்ம கிட்ட நெருக்கமா மாறீட்டீங்க...அதான்”என்று இழுத்தாள்...

‘‘ஒண்ணுமில்லையே எப்பவும் போலத்தான் இருக்கேன்” இது கணவன்.

‘‘மறைக்காதீங்க... உங்க முகரைய பார்த்தாலே தெரியுது... சொல்லுங்க! ஏதும் சின்னவீடு செட் பண்ணிட்டிங்களா.. அத மறைக்கத்தான் இப்படி கொஞ்சு றிங்களா நம்மகூட?’’

‘‘போடி லூசு’’.. அவன் சிரித்தான். ஆனால் அதில் உயிரில்லை.மெதுவாய் சொன்னான்.. “நீயா கேட்பே சொல்லணும்னுதான் இருந்தேன்’’ என கொஞ்சம் சீரியஸ் ஆனான்.

‘‘என்னஙக ஏதும் பிரச்சினையா’’படபடத்தாள்....

அவன் இல்லையென தலையாட்டியபடியே அவனது அலுவலக பையை திறந்தான். ஒரு டைரியை திறந்து ஒரு பேப்பரை எடுத்து நீட்டினான்.

“என்னஙக இது .’’

‘‘படி’’ என சொல்லிவிட்டு பின்னால் நகர்ந்து அமர்ந்தான்.

அவள் படிக்க தொடங்கினாள்... அவன் கண்கள் கண்ணீரை சிந்த ஆரம்பித்தது.

அன்புள்ள மகனுக்கு,

கண்டிப்பா என்றைக்காச்சும் இந்த கடிதம் உன் கையில கிடைக்கும்னு நான் நம்புறேன்.

உங்கப்பாவுக்கு மனைவியா உனக்கு அம்மாவ இந்த கடிதம் எழுதுறேன். ரொம்ப பெரிய கடிதம் பொறுமையா படி.அவசரமா வேலை இருக்குனு பாதி படிச்சி மீதிய இன்னொரு நாள் காத்திருந்துப் படிக்காத. உங்கப்பாவ நான் கல்யாணம் பண்ணும்போது நான் காலேஜ் லெக்சரர்.அப்புறம் நீ வந்த பிறகு உங்கப்பாக்கு அதிர்ஷ்டம் அடிச்சுது. இன்னும் கன்ஸ்ட்ரக்‌ஷன்ல வளர்ந்தாரு.அப்புறம் உன் தங்கச்சி பிறந்தா.

நான் வேலையை விட்டுட்டு வீட்டோட உங்கள கவனிச்சுட்டு இருந்தேன். உனக்கு தான் தெரியுமே

அப்பா எப்படி பிசின்னு...கல்யாணம் ஆன ஒரு வருஷம் தான் கனவு வாழ்க்கை.அப்புறம் எல்லாமே காத்தி ருந்த வாழ்க்கைதான்.உங்கப்பாவுக்கு காத்திட்டு இருந்தேன்.

அவர், அவர் உருவாக்க நினைச்ச ஆடம்பர வாழ்க்கைக்காக உழைச் சிட்டு இருந்தார். நீங்கள் ரெண்டு பேரும் தான் எனக்கு துணை.நாம தான் விளையாடுவோம். அப்புறம் நீங்க ஸ்கூலுக்கு போய்ட்டீங்க.. நீங்க வரதுக்கு காத்திட்டுருப்பேன்.

ஸ்கூல்விட்டு வந்ததும் கதை கதையா சொல்லுவீங்க.. அதுல பாதி பொய் இருக்கும்..அதெல்லாம் உங்க கற்பனைன்னு நினைச்சு ரசிச்சேன். அப்புறம் நீங்க வளர்ந்தீங்க.. அம்மாட்ட சொல்ல ஏதுமில்லாம போச்சு.

ஆனா உங்கள்ட்ட இருந்து ஆர்டர் மட்டும் வந்துச்சு. இப்ப வெளியே போகனும்...இப்படி வெளியே போக ணும்னு.. ஆனா வர்ற டைம் கேட்க முடியுமா அம்மாவால்? காத்திட்டு இருப்பேன்.

நீங்க சாப்டு வரீங்களா.... சாப்பிடாம வரீங்களானு பார்க்க காத்திட்டு இருப்பேன்.... நீங்க எக்ஸ்டரா கோச்சிங், பிரண்ட்ஸ் அரட்டைனு.. பிசி.இடையில உங்கப்பா உடம்பு முடியாம படுத்துட்டாரு. அவருக்கு டயத்துக்கு மாத்திரை கொடுக்கனும், மருந்து கொடுக்கணும், பிசியோதெரபி பண்ணனும் காத்திட்டுருப்பேன். காத்திட்டு இருக்கிறதே என்னோட வாழ்க்கை ஆகிடுச்சு பாத்தியா?

அப்புறம் உன தங்கச்சி கல் யாணம்... இப்ப அவ எப்படி இருக்கானு கூட அவளா முடிவு செய்ற நேரத்திலதான் என் கூட பேச முடியும்.... ஏன்னா அங்க அவ காத்திட்டு இருக்கா . ஒரு அம்மாவா...

உனக்கு சொல்லவே வேண்டாம். அப்பா தொழில எடுத்து செய்ய ஆரம்பிச்ச உடனே நீ ரொம்ப பிசியாகிட்ட..நீ கடைசி ஐஞ்சு வருஷத்தில் அம்மாட்ட பேசுனத கொஞ்சம் யோசியேன்...சாப்டிங்களா, மாத்திரை போட்டாச்சா.. ஊசிபோட் டாச்சா... இவ்ளோதான்.

உங்கப்பா வாழ்ற காலத்தில பிசியா இருந்தாரு.. நான் காத்திட்டு இருந்தேன்.கடைசி காலத்தில் ஏது வும் இல்லாம இருந்தாரு.. ஆனா மாத்திரைக்கு காத்திட்டு இருந்தாரு... என்கிட்ட பேச அவருக்கு விசயமே இல்லை...

பேப்பர் படிச்சாரு. புக் படிச்சாரு. தூங்குனாரு.ஏன்னா பேச வேண்டிய காலத்தில் பேசல... பேச நேரமிருந்த காலத்தில் பேச விஷயமில்லை... அனுபவமும் இல்லை

இப்படித்தான் பெரும்பாலான அம்மாக்களோடு வாழ்க்கை முடிஞ்சு போகுது.நாம என்னைக்காச்சும் வெளியே போகும் போது அங்க நிறைய அம்மாக்கள பார்ப்பேன்.. அவங்க எல்லார் கண்ணிலும் எனக்கு தெரியுறது காத்திருந்த ஏக்கம் மட்டும் தான். உன்னை மாதிரி பசங்க கூட்டிட்டு வர அவங்க மனைவிகளை பார்ப்பேன்...

அதுல இன்னைகே வாழ்ந்து டனும்... அடுத்த ஆறநாள் இவன் கூட பேசக்கூட முடியாதுன்ற ஒரு வேகம் இருக்கிறத பார்த்தேன்.

இன்னைக்கு ஒரு நாள் தானேன்னு புள்ளைக கேட்ட எல்லாம்

செய்ற அப்பாக்கள பார்த்தேன்.இது கொஞ்சம் கொஞ்சமா அவங்களுக்கு காரியம் சாதிக்கிற நாள் ஆகிடுதுனு புரிஞ்சுது... உங்களுக்கு ஒரு நாள் தானேன்னு ஒரு நினைப்பு வந்துடுச்சு. இதெல்லாம் ஏன் இப்ப சொல்றேனு யோசிக்கிறியா...

என் காலத்தில் இதெல்லாம் உங்கப்பாட்ட சொல்லி புரிய வைக்க முடியல.. ஆனா நீ அடுத்த ஜெனரேஷன்.. கொஞ்சம் யோசிப்பாயில்ல? அதான் உன்கிட்ட சொல்றேன். நான் உயிரோடு இருக்கும் போது சொல்ல முடியல... சொன்னாலும் உன்னால கேட்க முடியாது..அதனால தான் இப்ப சொல்றேன்.

உனக்கு வீட்ல ஒரு பொண்ணு இருக்கா, மனைவி இருக்கா... காத்திட்டு இருக்காங்க...உன் தங்கச் சிக்கு உங்கப்பா மேல இருந்த பாசம் உனக்கு தெரியாது.. ஆனால் அத அவ வெளிக்காட்டும் போது உங்கப்பா கட்டில்ல நகர முடியாம இருந்தாரு. அவருதான் அப்பானு அவ காலேஜ்க்கு ஸ்கூலுக்கு தெரியாத அளவுக்கு அவர் பிசி....அப்பா கூட அங்க போகணும் இங்க போகணும்ங்கிற எந்த ஆசையும் நிறைவேறல.. அவ அப்பா கடைசி காலத்தில சும்மா இருந்தபோது அவர் பேசனது அவ கேட்க முடியல.ஏன்னா அவ வேறு வீட்டுக்கு போய்ட்டா.. பாத்தியா வாழ்க்கைய ?

நீ உன் பொண்ணுக்கு அப்படி ஒரு வாழ்க்கைய கொடுத்துடாத! உன் மனைவிய அவளோட மகனுக்கு கடிதம் எழுத வச்சிடாத...இன்னைக்கு மூணுவேளை சாப்பிட சம்பாதிச்சுட்ட. நாளைக்கு மூணு வேளைக்கும் உனக்கு பிரச்சினை இல்லை.

இன்னும் சொல்லப்போனா, நீ இப்ப உழைக்கிறது உன்னோட அடுத்த பத்துவருஷம் கழிச்சி செலவழிக்க போறதுக்குதான்.. அத கொஞ்சம் குறைச்சிக்கோ.. சீக்கிரம் வீட்டுக்கு வா! பொண்டாட்டிகிட்ட புள்ளைககிட்ட பேசு... அவங்களுக்கும் நீ நல்லா இருக்கும் போதே கொஞ்சம் நேரம் கொடு... ஏன்னா அன்புக்காக காத்திட்டு இருக்கிறதும்.. ஒருத்தர காக்க வைக்கிறதும் ஒரு வாழ்க்கையா?

செய்வேனு நம்புறேன். ஏன்னா என்கிட்ட நல்லா பேசின பையன் தானே நீ...உன் மனைவி மகள விட்டுடவா போற...

கடிதத்தை படித்து முடிந்தாள். அவள் முகம் ஒருவித பரபரப்பில் இருந்தது.நிமிர்ந்து அவனை பார்த் தாள்... இரண்டு மிகப்பெரிய பலூடா ஐஸ்கீரிம் வந்திருந்தது.

அவள் மெதுவாய் தன் அலை பேசியில் இருந்து அவள் அம்மாவிற்கு போன் செய்தாள்... நான் தான்மா...

ஏன் சும்மா பேசக்கூடாதா?

என்ன செய்றேம்மா?.

அப்பா என்ன செய்றாரு... என பேசத்தொடங்கினாள்.

ஐஸ்கீரிம் கொஞ்சம் கொஞ்சமாய் உருகத் தொடங்கியது... அவன் சிரித்த படி சாப்பிட தொடங்கினான்.இனிமே அப்படித்தான்..

இனி அங்கே அன்புக்காக காத்தி ருக்க அவசியமில்லை.

# சமையல் டிப்ஸ்

• ப்ரெஷர் குக்கரில் நீராவி பொங்கிக் வழிவதைத் தடுக்க பேப்பர் சேவியட் அல்லது ஒரு மெல்லிய துணியை குக்கர் மூடிமேல் விசிலை சுற்றிப் போட்டால் சரியாகும்.

• குளிர்சாதனப் பெட்டிக்குள் ஒரு சிறு டப்பாவில் கொஞ்சம் சமையல் சோடா அல்லது கரித்துண்டுகளை போட்டு மூடாமல் உள்ளே வைத்து விட்டால் கெட்ட வாடை வராது.

• வெங்காயத்தை நீரில் கொஞ்சம் ஊறவிட்டு உரித்தால் கண்ணீர் வராது. இலேசாகவும் உரிக்கலாம்

• காய்ந்த மிளகாய்,பிஸ்கட்,முறுக்கு வகைகளை குளிர்சாதனப் பெட்டியில் வைத்தால் மொறுமொறுப்பாக இருக்கும்.

• சீனி டப்பாவில் சில கராம்புகளை போட்டு வைத்தால் எறும்பு வராது.

• சோறு,பருப்பு என்பன சமைக்கும் போது மூடி போடாமல், குறுக்காக ஒரு மரக்கரண்டி அல்லது அகப்பையை வைத்தால் பொங்கி வழியாது.

• சூப் செய்யும் போது,சோளம், கடலை, பயறு வகைகளைச் சிறிதளவு சேர்த்தால் சுவையாக இருக்கும்.

• கீரை வகைகளை சுத்தமாக்கி, உப்பு கலந்த நீரில் அரை நிமிடம் அமிழ்த்தி வைத்து பிறகு  பச்சை நிறம் மாறாமல் சமைத்தெடுத்தால் சத்துக்கள் அழியாது.

• லெமன் தோல்,லெமன் கிராஸ்,சங்குப்பூ, சீத்தாப்பழ மரத்து இலை,மருதாணி இலை,லெமன் இலை, துளசி, கொய்யா இலைகள் இவற்றில் ஒன்றை  பயன்படுத்தி தினமும் டீ போட்டு குடித்தால் பல நோய்களுக்கு மருந்தாக மட்டுமல்லாமல் உடல் சோர்வையும் உடன் போக்கும்.

• குழம்பில் உப்பு அதிகமானால் ஒரு எவர்சில்வர் அல்லது அலுமினியக் கரண்டியை நன்கு சூடாக்கி குழம்பில் வைத்தால்  சரியாகும்.

# விழிப்புடன் செயற்படுவோம்

**திருமதி. றீற்றா. இராசலிங்கம்.**
உடுவில்.

பெண்கள் நாட்டின் கண்கள் என்று அன்றைய முன்னோர் கூறிவைத்தார்கள். இன்று அந்த கண்களையே குத்தி குதறுகின்றார்கள். எங்கு பார்த்தாலும் பாலியல் வல்லுறவு, வன்முறை எனும் செய்திகளே ஊடகமெங்கும் பரவலாக வெளிவந்த வண்ணமே உள்ளது.

முற்காலத்தில் இப்படியான இழிவான செயற்பாடுகள் எங்கோ ஒரு சில பின்தங்கிய இடங்களில் மட்டும் நிகழ்ந்திருக்கின்றன. அத்த கைய செய்திகளும் வேண்டாத செய்தியாகவே பிரசுரிக்கப்பட்டது.

ஆனால் இன்று தினந்தோறும் ஏதோ ஒரு இடத்தில் அல்லது பல இடங்களிலும் இவ்வாறான துர்ச்சம் பவங்கள் நிகழ்ந்தவண்ணமே உள்ளன.

நான்கு வயது பெண் குழந்தை தொடங்கி மருத்துவபீட மாணவி வரை அசம்பாவிதங்களிற்கு அப்பாவி களாகப் பலியாகிக் கொண்டு தானிருக்கின்றாள் பெண்.

எல்லாவற்றிலும் பெண் தாக்கப் படுகிறாள். பெண்கள் இன்று வரை எத்தனையோ வகையில் முன்னேறி உயர் பதவிகள் வகித்தாலும் ஏதோ ஒரு விதத்தில் நசுக்கபடுகிறார்கள்.

இதில் இன்னுமொரு படி மேலே போய் வேலியே பயிரை மேயும் நிலையாகி பிள்ளைகள் தன் சொந்த உறவுகளாலும், குருவாக வணங்கும் ஆசிரியர்களினாலும் கூட இத்தகைய நிலைக்கு கொண்டு செல்லப் படுகிறார்கள்.

மாணவர்களிற்கு முன்மாதிரியாக நடக்கவேண்டிய, நாளைய நாட்டின் நற்பிரஜைகளை உருவாக்க வல்லவர் களாக இருக் கவேண்டிய ஆசிரியர் களே இத்தகைய இழிசெயல்களில் ஈடுபடும் போது அதன் வலி அத்தனை கொடிய தாகின்றது.

போதையில் சிக்கி தானும் சீரழி வது மட்டுமன்றி உறவின் அருமை தெரியாது, முறைதெரியாது மூளை முழுவதும் இறந்தவர்கள் போல்

நடந்துகொள்ளும் ஈனர்களும் சொந் தங்களில் உண்டெனும் போது எழும் வேதனை சொல்லில் அடங்காது.

'மாதராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும்' என பாடினான் பாரதி.

அத்தகைய மாதவம் செய்து இந்த மண்ணில் பிறந்த ஒவ்வொரு மங்கையரையும் போற்றிப் பாதுகாத்து ,அவர்களை மதித்து வாழ்வோமென்ற திடசங்கற்பம் கொண்டு நடப்பதே அவர்களை கௌரவப்படுத்தும்.

'தனி ஒருவனிற்கு உணவில்லை யேல் இந்த ஜெகத்தினை அழித்திடு வோம்' என்ற பாரதி இன்றிருந்தால் இந்த கொடூர செயல்களை கண்டு இன்னமும் கொதித்திருப்பான்.அண்ணல் காந்தியும் போராட்டத்தை மாற்றி யிருப்பார். அம்பேத்கார்கூட புது சாசனம் தந்திருப்பார். இன்னோரன்ன முன்னோர்களெல்லாம் நமக்கு கற் பித்துவிட்டு போனது ஒன்றே. விழிப் புடன் இருப்பதும், விரோதங் களிற் கெதிராய் எப்போதும் சளைக்காது போராடுவதுமே.

இறுதிவரை இதை கைக்கொள் வோம். எமக்கு நடக்கும் எந்த விரோதமாயினும் எம்முழு பலம் கொண்டு அவற்றை முறியடிப்போம் - முன்செல்வோம் - வெல்வோம். தீதும் நன்றும் பிறர் தர வாரா. பெண் பேதை இல்லை அவள் இருப்பாள் பெருநெருப்பின் கூராய். ■

# புத்தொளி வாழ்நெறி

**அ**

1. அன்புக்கு அடங்கு
2. அறியாமை நீக்கு
3. அக்கப்போர் தவிர்
   (வீண்சண்டை, உபத்திரவம்)
4. அகடம் நீக்கு (பொல்லாங்கு)
5. அகத்தார் உறவு பேண்
   (சுற்றத்தார், உறவினர்)
6. அகதியை ஆதரி
7. அகந்தை களை
8. அடாதது நீக்கு
9. அறநூல் கற்றறி
10. அன்பால் அடக்கு

**ஆ**

1. ஆகமம் போற்று
   (சைவப் புனித நூல்)
2. ஆங்காரம் அகற்று
   (ஆத்திரம்)
3. ஆசாரம் பேண்
4. ஆபாசம் தவிர்
5. ஆடை குறையேல்
6. ஆலயம் பேண
7. ஆக்கிரகம் தணி
   (கடுமையான கோபம், பொல்லாங்கு)
8. ஆகாத்தியம் வேண்டேல்
   (பாசாங்கு)
9. ஆபத்தில் உதவு
10. ஆன்றோர் சொற் பேண்.

**இ**

1. இச்சகம் பேசேல்
2. இடக்கர் கூறேல்
   (சொல்லத் தகாதவை)
3. இடம்பம் கேடாம்
   (ஆடம்பரம்)
4. இடும்பைக்கு எதிர்த்து நில்.
   (துன்பம், வறுமை)
5. இறையை மறவேல்
6. இரத்தல் கேடாம்
7. இரவல் வேண்டேல்
8. இல்லாளுக் கிணங்கி நில்
9. இளியன நெருங்கேல்
10. இன்சொல் பேசு

பக்கம் 28 பார்க்க

# இரு விழிகளின் சங்கமம்

உன் விழியில் தொலைந்த நான்
உன் வரவிற்காக காத்திருக்கிறேன்
அன்பே!

நம் வார்த்தைகளை விட நம் விழிகள்
காதல் கொண்டு பேசும் பாஷைகள்
ஒன்றித்து சங்கமித்து கலந்திடுதே!

உன் விழிகளில் எனைத் தேடி
நிமிடங்கள்தோறும் தித்திக்கும் என்
மனதிடம் தோற்றுக்கொண்டே
இருக்கிறேன்

உன் விழிகளில் எனக்கான காதலை
கண்டு மெய்சிலிர்த்துப் போனேன்!

என்ன தவம் செய்திட்டேன் நான்
உனை கண்ட நொடி நான் வீழ்ந்தும்
எனக்கே உரித்தான நாணம்
ஒட்டிக்கொண்டதே!

உன் விழியோடு என் விழியை
கலந்திடும் நேரம்
ஊற்றுக்கண் அடிஆழத்தில் இருந்து
நேசம் வழிந்தோடி வருவதை தடுக்க
இயலாது விக்கித்து நின்றேன்

இரு விழிகளின் சங்கமத்தின்
அசைக்க முடியா காதலாலே
உன் விழியில் விழுந்து நீந்தும்
என் காதலை திகட்டத் திகட்ட
உனக்களிக்க காத்திருக்கிறேன்
அன்பே!

நான்கு கரு விழிகள் நடனமாட நம்
காதலும் மேடையானதோ
இமைகளின் துடிப்பும் இங்கே..
சலங்கை ஒலிகளானதோ

விழிவரிசை தாக்கத்தில் காற்றின்
அலைவரிசையிலும்
கவனச்சிதறல்கள்!!

உன் விழித்தீண்டல்களை
மௌனியாய் மொழி பெயர்த்திடவே
வாய் மொழி மறந்த ஞானியாய்
நானும்

தேகம் உரசிட உறைந்திடும்
சூடும்அகம் நிறைந்ததோ
அமைதியான அவளவன்
பார்வையில்

~ ஜெனி

---

# மடமையைக் கொளுத்துவோம்

விதிதனையும் வென்றிடுவோம் மாத ரெல்லாம்
வித்தகராய் மாறிடுவோம் வாரீர் வாரீர் .
சதிசெய்யும் மானிடரைப் புறத்தே தள்ளிச்
சாதிக்க மடமையினைக் கொளுத்த வாரீர் .
பதியாக இருந்தாலும் சமமா யீங்கே
பங்கிடுவோம் கொள்கைதனை வாழ்வில் நாமே .
மதிகொண்டு வெல்வதற்கே பிறந்தோம் நாமே
மண்ணுலகில் .மாதருமே தெய்வ மன்றோ .

**கவிமாமணி . முனைவர் . சரஸ்வதி பாஸ்கரன்**

## பெண்மையின் மகத்துவம்

மண்ணிலே பெருமை
சேர்த்திடும் பெண்ணினம்
உண்மையில் வாழ்வினில்
உலவிடும் அதிசயம்
பெற்றவர் மனங்களின்
பெறுமதிப் பொக்கிஷம்
உற்றவர்உணர்ந்திடும்
உலகமகா அற்புதம்

வாழ்வெனும் அரங்கிலே
தாங்கிடும் பாத்திரம்
வார்த்தைகளில் கோர்த்திட
முடிந்திடாத இலக்கணம்
வலிகளும் பழிகளும்
தாங்கிடும் அவள்மனம்
பலியாகிப் போகாது
ஏற்றிடும் பக்குவம்

அடுப்படியில் அவள்
அரும்பணி மகிமையும்
அல்லும் பகலும்
அலுக்காமல் உழைப்பதும்
அன்னை தந்தையை
அனுதினம் காப்பதும்
பிள்ளைகள் வளர்ப்பதும்
தொல்லைகள் தவிர்ப்பதும்

எடுத்த காரியம்
முடித்திடும் உறுதியும்
அறுத்திடா உறவினை
அமைத்திடும் நேர்மையும்
தடைகளை உடைத்திடும்
தனித்துவச் சீர்மையும்
தனக்கே உரித்தான
ஆளுமை மகத்துவம்

**ஹாஜறா கலீலுர் ரஹ்மான்**
காத்தான்குடி

## பெண்ணே எழுந்திடு

தைரியத்தை ஏற்றிடு பெண்ணே!
தாயகத்தை காத்திடு பெண்ணே!
கோழையாக நிற்காதே பெண்ணே!
கொடுமைகளுக்கு படியாதே
பெண்ணே!

பேச்சைக் குறைத்திடு பெண்ணே!
பொறுமையில் நிலைத்திடு
பெண்ணே!
துன்பத்தை மறந்திடு பெண்ணே!
தீமையை அகற்றிடு பெண்ணே!

புத்தியை தீட்டிடு பெண்ணே!
புதுமைகள் படைத்திடு பெண்ணே!
சத்தியம் காத்திடு பெண்ணே!
சரித்திரம் படைத்திடு பெண்ணே!

நல்லதை கற்றிடு பெண்ணே!
நாசக் குணங்களை அழித்திடு
பெண்ணே!
பழமையை மதித்திடு பெண்ணே!
பண்புகள் காத்திடு பெண்ணே!

சோம்பல் தவிர்த்திடு பெண்ணே!
தோல்வியை தொலைத்திடு
பெண்ணே!
திறமை வளர்த்திடு பெண்ணே!
துணிந்து எழுந்திடு பெண்ணே!

**ஷிபானியா பௌசுல்**
நேகம




# தலைமுறை மாற்றங்கள்

## தலைமுறை - 1

கலியாணம் முடிச்சு அடுத்தண்டு தான் மூத்தப்பாவ தெரியுமாம் அவக்கு.

நிலவும் இல்லாட்டி ராவயில யாருக்கும் விளங்காத கலரொண்டு மூத்தப்பா. ஆனா அவ மனிசி நல்ல குத்துப் பச்சரிசிமாக் கலர். ஆயிரெத்தெட்டு வேலை இருந்தாலும் வழுகி உழுவுற அந்த முக்காட்ட இழுத்து இழுத்து மூட்றதுலதான் அவட கவனம் எல்லாம் இரிக்கிம். அவட பெரும் பொழுதுகள் எல்லாம் குசினிக்குள்ளதான். இருந்தும் அவக்கு என்ன சாப்புடப் புடிக்கும் எண்டு இன்னமும் அவக்கே தெரியா.

வடிஞ்சு போற வேர்வையை துடைக்கிறதுக்கும் டைம் இல்லாத வேலை. ஆனா மனிசனுக்கு குசினி எந்தப் பக்கம் எண்டும் தெரியா. ஊருக்கெல்லாம் உபதேசம் செஞ்சாலும் மூத்தப்பாவக் கண்டா வெண்டா கதவிடுக்கிக்குப் பின்னுக்கு நிண்டுதான் ''தேத்தண்ணி ஊத்தயா?'' எண்டு கேப்பா. அவ மனிசி அப்பிடித்தான். எனக்கு புத்தி தெரிஞ்ச காலத்துக்கு அவர்ர பேர அவட வாயால சொல்லி நான் கேட்டதே இல்ல.

மை டப்பாவுல பெருவிரல ஊண்டித்தான் தன் இருப்பை அரசாங் கத்துக்கு உணர்த்துவா.ஆனா மனிசன் நல்லா படிச்சிருக்காரு. அந்தக்



காலத்துல நல்லா எழுதப் படிக்க தெரிஞ்ச ஆக்களுக்குள்ள அவரும் ஒராள். அதாலதான் அவரு அப்ப "வட்டானை" யாம். மனிசிக்கெண்டா அதெல்லாம் என்னென்டும் தெரியா. மூத்தப்பா கடற்கரை தோட்டம் எண்டு சுத்திட்டு வந்து அதையெல்லாம் பத்தி விவரிச்சி சொல்லுவாராம். மனிசி "ம்" எண்டு எல்லாத்தயும் கேட்டுட்டு மட்டும் இரிப்பாவாம். மூத்தப்பாட அந்த இரும்புப் பொட்டிக்குள்ள இருக்கிற பேப்பர் துண்டுகள தொடயும் உடமாட்டாவாம். பொட்டிக்கு வெளியில ஒரு பேப்பர் துண்டு பறந்து வந்து உழுந்தாலும் கண்ணுல ஒத்திக்காத குறையா கவனமா எடுத்து வெப்பாவாம். அவ நல்ல வசதியான குடும்பத்துல பொறந்து வளர்ந்தவதான். ஆனா அவரை கல்யாணம் முடிச்சதுக்கு பொறகு ஒரு கொத்து அரிசி வாங்கு றண்டாலும் மூத்தப்பாட கண்ண சைவுக்கு காத்திட்டு நிப்பா. காய்ச்சல் தலையிடி எண்டாலும் கை, கால் நீட்டி கொஞ்ச நேரம் படுக்கயும் மாட்டா பகலயில. ஒருநாள் உட்டு ஒரு நாளாவது மூத்தப்பாட கூட்டாளிமாரும் சொந்தக்காராக்களும் மறக்காம வந்துடுவாங்களாம். பெரு நாள் நாளையிலையும் அவட ஊட்டு ஆக்கள காண்றண்டா "கரடி புற கண்ட கணக்கு"த்தானாம். என்ன வெஞ்சத்திலயோ தெரியா என்ட மாமாமாரு

ஸ்கூலுக்கு போகாட்டியும் பெரிசா கணக்கெடுக்காதவ அவட பொம்புள புள்ளயள் ஸ்கூலுக்கு போகாம உட்டா சுள்ளிப்பிரம்போட நிப்பாவாம். ‘‘ஒரு கைத்தொழில் எண்டாலும் பொம்புள புள்ளயள் கட்டாயம் தெரிஞ்சு வெச்சிரிக்கணும்’’ எண்டு அடிக்கடி சொல்லுவாவாம். அவக்கெண்டு ஒரு விருப்பு வெறுப்புமே இல்லாம கடைசி வரைக்கும் ‘‘வட்டானட மனிசி’’யாவே அவ வாழ்ந்திடட்டா

## தலைமுறை - 2

உம்மாகிட்டகேட்டுத்தான்வாப்பாவ கலியாணம் முடிச்சு வெச்சயாம்.


எங்கட வாப்பாவ கண்டு உம்மா ஓடி ஒளியிரல்ல. கதவிடுக்குக்கு பின் னுக்கு நிண்டு கதை கேட்கி றல்ல. வடியிற வேர்வையை துடைக் கிறதுக்கும் அவ கொஞ்சம் நேரம் எடுப்பா. எப்பயாவது அவக்குப் புடிச்சதையும் அவ சமைப்பா. குசினி பக்கம் அடிக்கடி வாப்பாவும் வருவார். இருந்திருந்தாப் போல தேங்காயும் திருவுவார். மாசம் மூணுநாள் வாப்பா வாசலும் கூட்டுவார். மை டப்பாவுல பெருவிரலை ஊண்டி நாலு பேருக்கு முன்னுக்கு நிண்டு உம்மம்மாவப் போல சங்கடப்பட மாட்டா. உம்மா அவட பேரை அழகா எழுதுவா. கூடவே கொஞ்சம் வாசிப்பா. எனக்கும் ‘‘ஆனா ஆவன்னா’’ எல்லாம் அவ தான் சொல்லித் தந்தா. தேவையான நேரத்துல வாப்பாட பேரை வாப்புடப்பாட பேரோட சேர்த்தே சொல்லுவா.

ஆனா “புள்ளட வாப்பா” எண்டுதான் வாப்பாவ கூப்பிடுவா. வாப்பாவோட கடற்கரைக்கும் போவா. கால் மட்டும் கொஞ்சம் நனையலாமாம். உம்மா சில்லறைக் கடை ஒண்டு போட்டு வியாபாரமும் செய்றா. எல்லாத்துக்கும் வாப்பாவையே எதிர்பார்த்து நிற்க மாட்டா. «கடைக்காரி» எண்டு ஒரு அடையாளமும் இருக்கி அவக்கு.

## தலைமுறை-3

இப்போதைக்கு கலியாணம் எண்ட கதைக்கே இடம் இல்ல எண்டுட்டு படிச்சி முடிச்சிட்டு எனக்குப் புடிச்ச ஒராளத்தான் ஊட்டாக்கள்ற சம்மதத்தோட கலியாணம் முடிச்சன். அவரும் வேலைக்குப் போறாரு. நானும் வேலைக்குப் போறன்.

கலியாணம் முடிச்ச உடனே புள்ள குட்டி பெத்துப்போடல்ல. ரெண்டு பேரும் சேர்ந்து ரெண்டு வருஷத்துக்கு பொறகுதான் அதெல்லாம் எண்டு முடிவெடுத்தம்.நான் அவர அடிக்கடி பேரு சொல்லிக் கூப்புடுவன்.



செல்லப்பேரு சொல்லியும் சில நேரத்துல. ஒன்டா ஒரு கதிரயில சரிசமனா இருந்துதான் தேத்தண்ணி, சாப்பாடு எல்லாமே. எங்கட புள்ளைக்கு ''ஆனா ஆவன்னா''வோட சேர்த்து ''இங்கிலீஷ்''சும் படிச்சு குடுக்கன். எல்லா நேரத்திலயும் நானே சமைக்கிறயுமில்ல. நான் மட்டும் தனியா சமைக்கிறயுமில்ல. மாதம் மூணுநாள் அவரு ஊடு கூட்டுவாரு; உடுப்பு கழுவுவாரு; சோறு கறி ஆக்குவாரு. மத்த நாளையிலயும் சும்மா இரிக்கிற நேரத்துல நாலு வேலை செஞ்சி தருவாரு. எங்கட ஊட்ட அவர்ர கூட்டாளிமார் மட்டும் வாரல்ல. என்ட கூட்டாளிமாரும் வருவாங்க. கடற்கரையோரத்தில நான் தாராளமா கால் நனைக்கலாம். எனக்குப் புடிச்ச உடுப்பு, எனக்குப் புடிச்ச சாப்பாடு, எனக்குப் புடிச்ச படிப்பு எண்டு தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களும் எனக்கு இரிக்கி. எனக்குத் தேவையானதை நானும் வாங்குறன். அவருக்கு தேவையான தையும் சில நேரத்துல வாங்கி குடுக்கன். குடும்ப முடிவுகளை ரெண்டு பேரும் சேர்ந்துதான் எடுக்கம். ''அவர்ர மனிசி'' எண்டு யாரும் என்னக் கூப்புட்ரல்ல. எனக்கெண்டு ஒரு ''அடையாளம்'' இரிக்கி.

**நிலாத்தோழி**
(பரீனா பின்த் இஷ்ஹாக்)



## முகமூடி

முகமூடியில்லா உலகில்
வாழும் வரம் கேட்கிறேன்
உன் முகமூடியைக்
கழற்றிவிட்டு வரம் கேள்
யாருமில்லா தனித்தீவிற்கு
அனுப்பி வைக்கிறேன்
என்கிறார் கடவுள்
தன் முகமூடியை
கழற்றியவாறே...

## சுதந்திரம்

சுதந்திர தினம்
உயிரியல் பூங்காவில்
அலைமோதும் கூட்டம்
கூண்டுக்குள் விலங்குகள்

## ஆசை

உதிர்க்க உதிர்க்க
துளிர்த்துக்கொண்டே
இருக்கின்றன
ஆசையிலைகள்

## பற்று

பற்றுதலை விடும்போது
இலேசாகிறது
யாக்கை
போதிச்சருகு போதித்தது

## நீ......ளும் காத்திருப்பு!

இரண்டாயிரம் ஆண்டுகளைத் தாண்டி
காத்துக் கிடக்கின்றன
போதிமரங்களை
வெட்டிச் செய்த சிலுவைகள்
இன்னொரு புத்தருக்காகவும்
இயேசுவுக்காகவும்


**- பா.சிவகுமார்**
சென்னை 600022

# றோணியோக்களின் வளர்ச்சி-08





இலக்கியம் வளர்ப்போம் இலட்சியத்தோடு! என்ற கோஷம் எழுப்பப்பட்டுள்ளது. ஆசிரியர் :வி. மைக்கல் கொல்வின் அமைப்பு: ஓவியம் அன்பிதயன்.1985/ஏப்_ மே.Thaham, W.Michael coll.n, 125,Green Road, Tricomalee. என்னும் முகவரியில் இருந்து வெளிவந்துள்ளது.விலை 250/,=சதம்.

உள்ளே போவோமா?



காலத்தோடு கலந்து கைகோர்த்து தடம் பதித்த இலக்கிய பயணத்தை பின்னோக்கி நினைத்துப் பார்த்தால் அழகான நினைவுகள் எம் மனங்களை அலங்கரிக்கின்றன. இலக்கியத் தாகத்தை தீர்த்த அன்றைய றோணியோக்கள் இன்றும் எல்லோர் நினைவுகளிலும் வாழ்கின்றன.

அந்த வகையில் இன்றைய ஆய்வுக்கு கைகொடுத்தது ‘‘தாகம்’’ றோணியோவாகும்.



கலைக்காதலி  அஷ்ரபா நூர்தீன்.
கவிதாசரண்
ம.ஜெயராஜ்
மு.மேத்தா
திரும(லை)ரூபன்
சு.பிதா
தாகங்கள் - வி.மைக்கல்கொல்வின் (தமிழ்ப்புலவர் )
நல்லவராய் நடிக்கின்றார் சிலர் - கலைக்காதலி  அஷ்ரபா, நம்காதல் தூய்மையானது - கவிதாசன், ஒருகாலத்தில் புறக்கணிப்பு - ம.ஜெயராஜ்,கண்ணில் பட்ட கலை ஏடுகள், அழகிகள் ஜாக்கிதை - மு.மேத்தா, படிப்பினை - சு.பிதா, நீர்த்துளி - திரும(லை) ரூபன், சமுதாயம் - திருமலை திருமகன் ஒரு பனி இரவில்... பாலையூற்று பௌசியா நூர்தீன், நாளை விடியுமா?(சிறுகதை) - திக்குவல்லை ஸப்வான், உதிர்வின் ஓரம்...! - கலைமகள் ஹிதாயா, அக்கினி புத்திரிகள்! - இபுனு அஸூமத், இணையும் இராகங்கள் -யார் நினைப்பு உனக்கு...?_மருதூர் தாசன், உருவம்_ சித்தி ஜெரீனாகரீம், பக்கம் வாடியென் பைங்கிளியே.. மசூறா ஏ.மஜீட் , கிராமத்து காதலி....! - அன்பிதயன் சிறாஜ், சோதனையில் சிலகணக்கு !_ இதழன்பன் இப்றாகீம், சிகரெட்!_ ரிஷி, ஆழ்ந்த அன்பு_ எம்.ஐ.எம். அஷ்ரப், வாழ்க தாகம்!__ கலை உத்தமி தங்கம்,. தாகம்_புதுக்கவிதை போட்டி, எண்ணக்குவியல்_1_ அஷ்ரபா நூர்தீன். ஆகியோர்களின் படைப்புகள் இடம்பெற்றுள்ளன. அழகான எழுத்து காத்திரமான படைப்பு வாழ்த்துக்கள் இன்ஷா அல்லாஹ் மேலுமொரு றோணியோவுடன் சந்திக்கும் வரை... விடைப்பெறும் நான்

**எஸ்.யூ.கமர்ஜான் பீபீ**
வத்தளை



## ஒன்றே தான்

சிறு கண்களில்
எத்தனை பார்வைகள்
அத்தனை பார்வைகள்
ஆண்டவன் படைத்ததா?
கண்கள் என்பது
அழகிய உறுப்பபடா

கண்களால் தான்
காதல் பிறக்குது
என்கிறான் மனிதன்,
ஏதோ இவன்தான்
காதலைப் படைத்த
கடவுளை போல

கண் இல்லாதவனும்
காதல் செய்கிறானே என்றால்
அதற்கொரு பதில்
வைத்திருப்பான் போல,

எளிமையாய்க் கூறி விடுகிறேன்
புரிந்து கொள் நண்பா

‘கண்ணும் பெண்ணும்’ ஒன்றே
ஒன்று- இரண்டும் கலங்காமல்
இருந்தால் வாழ்க்கை நன்று..

**ஆரூர். சிவ. மணிவேல்**

## ரங்கோலி

எறும்புகளைப்
பெருக்கித் தள்ளியதும்
கரும்பாகிறது
வாசல் கோலம்.

## அயிரைப்பூக்கள்

கண்களில் தாவுகின்ற
பிரபஞ்சங்கள்நீர் தெளித்து
அடக்கப்படுகிறது

முனகும் அதரங்களில்
பெருங்கடலென மாறுகின்றன
நுரைமலர்க் கொப்பளங்கள்

வால்நுனிகளில் கரைந்து
கூடையின் இடுக்குகளில்
கசியத்துவங்குகின்றன
சிறு சிறு இதயங்கள்

அன்பால் நிறைந்த இப்பூவுலகின்
கொடூர நகர்வுகளில்
உயிர்மணம் இழக்கின்றன
கூடைநிறைந்திருக்கும்
அயிரைப்பூக்கள்!

**ரகுநாத் வ, மதுரை**

## தன்முனைக் கவிதைகள்

●
என் விடியல் உன்னோடு
ஆரம்பித்து இரவும் தொடரும்
குவளையில் தேநீர் தருகிறாய்
நிறைய காதலைக் கலக்கி

●
என்னைச் சுற்றி ஒளிவட்டம்
ஞானம் பெற்றதால் அல்ல
என்னை ஒளிர வைக்கும்
மனதில் துளிர்க்கும்
நற்சிந்தனைகள்

**வஃபீரா வஃபி**

## பெண்ணவள்

சிந்தனை துளிகளின்
அழகான வரிகளா கவிதை
அப்படி என்றால் பெண்ணும் ஒரு
அழகான கவிதை தானே

மென்மையிலும் மென்மை அது
பெண்மை
அவளின் எளிய அசைவில்
ஒன்றுதான்அழுகை
அந்த அழுகையைகூட
அழகாய் உணர்த்துவாள்
அவள்தான் பெண்

Nirooza Mohideen




# புதுமைப்பெண் முனிபா மஸாரி

**றீனத் றாசிக்**
நீந்தவூர், இலங்கை

வாழ்க்கை அனைவருக்கும் உரித்தானது. இன்பமோ, துன்பமோ, கஷ்டமோ, கண்ணீரோ கடந்து செல்லத்தான் வேண்டும். அவ்வாறே இவ்வழகிய கதையின் இதழ்ப்பக்கம் இன்றே திறக்கிறது...

இக்கதை ஒரு பெண்ணுடையது. ஆம் வலிமிக்க பெண்ணுடைய வாழ்க்கை கதையே இது. கனவுகளை கலைத்து கண்ணீரைத் மறைத்து கால் தடம் பதித்திட்டார் இக்கதாநாயகி. சொல்லைத் தட்டாத பிள்ளையாய் 18 வயதில் கனவனை சூடிக்கொண்டாள். அவ் வாழ்க்கை வளம் மிக்கதாக அமையவில்லை. இரண்டு வருடமாகியும் சந்தோசமான வாழ்வின் விளிம்பைக் கூட அவர்கள் பார்க்கவில்லை. ஒன்பது வருடங்கள் கடந்தது.ஒருநாள் முனிபா மஸாரியும் அவர் கணவனும் வீதியில் பயணித்துக் கொண்டிருந்தார்கள். முனிபாவின் கணவனின் தூக்கமிகுதியால் அவ்வாகனம் கொடூர விபத்துக்குள்ளாகியது. அவரின் கணவனால் தப்பித்துக் கொள்ள முடிந்தது. ஆனால் துரதிஷ்டவசமாக முனிபா மஸாரி உள்ளே இருந்தார் அவரால் தப்பித்துக் கொள்ள முடியவில்லை.

சுக்குநூறாக உடைந்தார். வலது கை முற்று முழுதாக உடைந்தது. மணிக்கட்டுடைந்து சிதைந்து இருந்தது. கழுத்து, விலா எலும்பு முழுதும் உடைந்து காயமாகவே இருந்தது மூச்செடுக்க கூட முடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டு இருந்தார். சிறுநீரக குடல் கட்டுப்பாட்டை இழந்தார். இக்காயங்களே காலத்தை முழுமையாக மாற்றியது.

அவ்விபத்து நடந்தது ஓர் தொலை தூரநகர். அங்கு முதலுதவி இல்லை, வைத்தியசாலை கூட இல்லை. அவர் அந்த வாகனத்தில் சிக்கிக் கொண்டபடியே நடுத்தெருவில் இருந்தார். பல மக்கள் காப்பாற்ற முன் வந்தார்கள். அவரை காரில் இருந்து இழுத்து காப்பாற்றிக் கொண்டிருந்தார்கள். முனிபா மஸாரி அங்கு உயிரிழந்து கொண்டிருந்தார். பலவிவாதங்களுக்கு மத்தியில் அவரை எப்படியோ வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார்கள்.

நகருக்கும் வைத்தியசாலைக்கும் இடையே மூன்று மணித்தியால பயணத்தூரம். இறுதியாக சிக்கிக் கிடந்த உடலாய் முனிபா மஸாரி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார். இரண்டு மாதங்கள் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றார். பல சத்திர சிகிச்சைகளை அவர் மேற்கொண்டார்.

ஒவ்வொரு கெட்ட செய்தியும் அவரை நோக்கி தீண்ட வந்தது முதலில் டாக்டர் வந்து கூறினார் «சித்திரக்கலைஞர் ஆகுவது உங்கள் இலட்சியம். ஆனால் நீங்கள் இனி வரையவோ வர்ணந் திட்டவோ முடியாது. உங்கள் மணிக்கட்டு மற்றும் கைகள் சிதைந்து விட்டன»அதற்கு அவர் பெருமூச்சை இழுத்து விட்டார். மீண்டும் டாக்டர் முனீபாவிடம் வந்து ‘‘உங்கள் முதுகுத்தண்டு உடைந்துள்ளது ஆகவே நீங்கள் இனி எழுந்திருக்கவோ நடக்கவோ முடியாது’’ என்றார். அதற்கும் அவர் பெருமூச்சு விட்டார். மீண்டும் டாக்டர் முனிபாவிடம் வந்து “உங்கள் முதுகுத்தண்டு காயத்தால் கர்ப்பப்பையில் ஏற்பட்ட பாதிப்பால் நீங்கள் இனி குழந்தை பெற்றெடுக்க முடியாது’’ என்று அக்கணமே அவர் மனதளவில் உடைந்து போனார். முனிபா மசாரி அவர் தாயிடம் கேட்டார் “ஏன் நான்? எதற்காக வாழ்கிறேன்? என் நோக்கம் என்ன?’’ என ஒவ்வொரு கேள்விகளையும் திணித்தார். நான் என்ன நோக்கத்துடன் வாழ்வது?... என்னால் நடக்க முடியாது... நான் விரும்பிய இலட்சியத்தை தொடர முடியாது... என்னால் ஒரு தாயாக கூட முடியாது. முழுமையடையாத பெண்ணாக எவ்வாறு இந்த உலகில் வாழ்வேன்? என்ற பல கேள்விகளை அவர் எழுப்பினார். ஒவ்வொருவரது வாழ்க்கையில் நாம் கஷ்டத்தில் இருக்கும்போது இருட்டு அறையில் ஏதாவது ஒரு மூலையில் வழியாய் வெளிச்சம் இருக்கும். ஆனால் முனிபா மஸாரியின் வாழ்வில் அவர் பயணித்தே ஆக வேண்டும் இருப்பினும் அங்கு வெளிச்சம் இல்லை இருளாகவே இருந்தது.

முனிபாவின் தாயார் கூறினார் ‘‘கவலை வேண்டாம் இறைவன் உனக்’காக சிறப்பான திட்டத்தை வைத்திருப்பார்’’ என அவ் வார்த்தைகள் தான் அடுத்த அடி எடுத்து வைக்கத் தொடக்க மாக அமைந்தது. கவலைகளை மறைத்தார். தான் கவலையடைந்து தனது குடும்பம் கண்ணீரில் தன்னுடன் மூழ்கிக் கிடப்பதை அவர் விரும்ப வில்லை. அடுத்து என்ன செய்வது? என்ற கேள்வி முனிபாவின் மனதை உசுப்பிக் கொண்டே இருந்தது.

அவர் தங்கி இருந்த வைத்தியசாலை விடுதியில் அனைத்துமே ஒரே நிறமாக, வெண்மையாக இருந்ததால் அவர் சலிப்படைந்தார். அவர் வர்ணங்களைக்காண விரும்பினார். தன் வாழ்வை வர்ணமயமாக்க விரும்பினார். “நான் வர்ணம் தீட்ட வேண்டும். என்னுள் வண்ணங்களை ஊற்றுங்கள் என முறையிட்டார்'' எனவே அவர் முதலாவது சித்திரத்தை தன் மரணப் படுக்கையிலே வரைந்தார். அச்சித்திரம் ஒரு கலையாகவோ, காட்சியாகவோ அமையவில்லை அது ஒரு சிறந்த சிகிச்சையாகவே அமைந்தது. அவ்வாறே இரண்டரை மாதங்கள் வைத்தியசாலையில்சிகிச்சைபெற்றாரோ இல்லையோ ஆனால் சித்திரக்கலையால் அடையாளப் படுத்திக் கொண்டார் .

பின்பு அவர் வைத்தியசாலையில் இருந்து வெளியேற்றப்பட்டு வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். தனக்கு நிறைய வலிகள் இருப்பதையும், தன்னால் இருக்க முடியவில்லை என்பதையும் அவர் உணர்ந்தார். முனிபா மஸாரியின் மீது பல தொற்றுக்கள் மற்றும் ஒவ்வாமை இருப்பதனால் வைத்தியர்கள் அவரை நேராக படுத்துக்கொள்ள முறையிட்டார்கள். அது ஆறு மாதம், இல்லை ஒரு வருடமில்லை, இரண்டு வருடங்கள். நினைத்துப்பாருங்கள் எம்மால் குறைந்தது பத்து நிமிடம் கூட நேராக நிமிர்ந்துப் படுக்கையில் தூங்கமுடியாது. ஆனால் இரண்டு வருடங்கள் நேராக படுக்கையில் இருந்தார். முனிபா மஸாரி இருக்கும் அறையின் ஜன்னல் வழியாக இயற்கையையும்,வர்ணங்களையும், பறவைகளின் நடமாட்டங்களையும் தன் உள்ளத்தில் தேக்கியபடி வாழ்ந்து கொண்டிருந்தார். அந்த நேரம் அதிர்ஷ்டசாலியான மக்களை முனிபா உணர்ந்தார். ஆனால் நாம் அதனை உணர்வதில்லை பார்க்க கண் கொண்டு,கேட்க காது கொண்டு நுகர மூக்கு கொண்டு,ருசிக்க நாக்கு கொண்டு, உணர தோல் கொண்டு எம் ஐம்புலங்களையும் ஆழ்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் இங்கு அதிர்ஷ்டசாலிகள் தான். இரண்டு வருடம் இரண்டரை மாதங்களுக்குப் பிறகு முதன் முதலில் சக்கர நாற்காலியில் அமர்ந்த போது தான் நான் மறுபிறவி அடைந்தேன் என்கிறார். கண்ணாடி முன்னமர்ந்து» இதுதான் என் வாழ்க்கை, நான் இதனை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும், நல்லவை எனை நிச்சயமாக தேடி வரும்» என்று தனக்கு தானே கூறிக் கொண்டார்.அவர் சிறந்த மனிதர்களில் ஒருவராய் இருக்க முடிவு செய்யவில்லை.அவர் சிறந்த வாழ்வாக இருக்கவே முடிவு செய்து, தனது மன தைரியங்களையும் வலிமைகளையும் வளர்த்துக் கொண்டார்.

முனிபா மஸாரி அவரது பயங்களுடன் சண்டையிட்டார். அச்சத்தை துச்சம் எனக்கருதி உச்சம் தொடவே முடிவு செய்தார். அந்த நேரம் முனிபா மசாரிக்கும், கணவனுக்கும் இடையே உள்ள விவாகரத்து பெரும் அச்சமாக அமைந்தது. இது ஒன்றும் எனது பயமில்லை என முன்னோக்கி அடி எடுத்தார். இரண்டாவதாக தான் தாயாக முடியாது எவ்வாறு இந்த வாழ்க்கையை கொண்டு செல்வது என்பதுதான் அச்சமாக அமைந்தது. அவர் சற்று சிந்தித்தார் இந்த உலகில் எத்தனையோ சிறுவர்கள் அநாதையாக இருக்கிறார்கள் அதில் ஒன்றை ஏன் தத்தெடுக்கக் கூடாது என்று யோசித்தார். ஆம் தனக்காக நையல் என்ற ஒரு ஆண் குழந்தையை தத்தெடுத்தார் மூன்றாவது பயமாக அவர் மக்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பதுதான். மக்களிடமிருந்து அவர் வாழ்க்கை மறைக்க விரும்பினார். இரண்டு வரும்

முனிபா படுக்கையில் இருந்தபோது எப்போதுமே தன் கதவு மூடி இருப்பதை விரும்பினார். யாராவது அவரை பார்க்க வந்தாலோ ஏதாவது சொல்ல வந்தாலோ தான் தூங்கி விடுவேன் என்றார். ஏன் என்று தெரியுமா? அவர்கள் என்னை நோயாளியாகவே நோக்குகிறார்கள் ஆனால் நான் அதை விரும்பவில்லை என்றார்.இன்று நிறைய உள்ளங்கள் மத்தியில் தங்கியிருப்பதற்கு காரணம், பயத்திலிருந்து வெளிவந்தது தான் என்கிறார்.

முனிபா மஸாரி பல கலை நிகழ்வுகளில் கலந்து கொண்டார். பாகிஸ்தான் முதலாவது சக்கர நாற்காலி ஓவியர் என்ற பெயரையும், உலகில் 100 சிறப்புமிக்க பெண்களில் அவர் முப்பதாவது இடத்தை 2016 ஆம் ஆண்டில் பெற்றார். அவர் பல இரும்பு சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டதால் பாகிஸ்தானின் இரும்புப்பெண்மணி என்ற பெயரையும் சூடிக்கொண்டார். அது அவருக்கு அவமானமாக வேதனையாகவோ அமயவில்லை.அது ஒரு அடையாளமாகவே அமைந்தது.

நாம் எப்போது எம் வாழ்க்கையை



உணர்ந்து ஏற்றுக் கொள்கிறோமோ அப்போதுதான் இந்த உலகம் எம்முடன் சமூகமளிக்கும்.மற்றவர்களுக்காக நாம் சிறந்த நபராக வாழாமல் தனக்காக தன் வாழ்க்கையை சிறந்ததாகவே வாழ வேண்டும் என்று கூறினார். இறப்பதற்கு முன்னால் இறக்காதீர்கள் நாம் அனைவரும் இறந்து கொண்டிருக்கிறோம் என்று கூறினார். நமது வாழ்க்கையில் முழு அன்பையும் செலுத்த வேண்டும்.அப்பொழுதுதான் எம்வாழ்வு எமக்கு வளமாகிறது. நமக்கு நேரும் கஷ்டங்களை வைத்து கவலை அடைவதை தவிர்ப்போம். எந்த கஷ்டங்களும் நமக்கு இல்லை, எத்தனை இன்பம் நமக்குள் பாடிக் கொண்டிருக்கிறது என்பதை நினைத்தே மகிழ்வோம். மகிழ்ச்சி அடைவோம். வாழ்க்கை அனைவருக்கும் கடினமானது. இடர், துயர் இருந்தேயாகும். தடைகள் வந்தே தீரும்.. அதில் தடைப்பட்டு தான் ஆக வேண்டும். விழுந்த தடையை எண்ணி வருந்துவதை விட்டுவிட்டு அடுத்த இடரை எவ்வாறு ஒழிக்கலாம் என்றே சிந்திப்போம். கடந்த காலம் காற்றை போல் வேகமாக போய்விடும் இங்கு பனத்திலோ பொருளிலோ சந்தோஷமோ, நிம்மதியோ இல்லை. நாம் வாழும் வாழ்க்கையிலும் நடத்தையிலும் தான் சந்தோஷம் தங்கியிருக்கிறது.

இறந்தகாலத்தை வானில் பறக்க விடுவோம். நிகழ் காலத்தில் கற்றுக் கொள்வோம். எதிர்காலத்தை பொக்கிஷமாக நம் கைகளில் பொத்திக் கொள்வோம். அவ்வாறே இப்பெண்ணும் தன் கடந்த வாழ்வை எண்ணி துவண்டு விடவில்லை. தன் வெற்றி இலக்கு நோக்கிப் புறப்பட்டு உச்சம் தொட்ட புதுமைப் பெண்ணே முனிபா மஸாரி.




# திருமதி (B)பிஸ்லியா பூட்டோ

(சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சில பெண் ஆளுமைகளை அறிமுகப் படுத்தவுள்ளோம். அவர்களில் ஒருவரான திருமதி (B)பிஸ்லியா பூட்டோ தன்னைப் பற்றிய அறிமுகத்தைத் தருகிறார். மகளிர் தினத்தில் அவரே இதைத் தருவது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகிறோம்)

நான் பிஸ்லியா பூட்டோ. முஹம்மது அலி பூட்டோ - பௌசுல் றிபாயா தம்பதியினரின் மூத்த புதல்வியான எனக்கு இரண்டு குழந்தைகள். கணவர் வியாபாரம் செய்து வருகின்றார். எனக்கு நான்கு சகோதரிகள். சித்திரம், எழுத்து, தையல், இசை மற்றும் பயணம் செய்தல் என்பவற்றில் ஆர்வம் அதிகம். தற்போது பேராதனை பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளரின் உதவி ஆய்வாளராக வேலை செய்து வருகின்றேன்.

நான் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவள். 1990ம் ஆண்டு வடக்கில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பலவந்தமாக முஸ்லிம்ள் வெளியேற்றப்பட்ட போது புத்தளத்தில் குடியேறினோம். அப்போது எனக்கு வயது 3. அதன் பின்னர் ஆரம்பக் கல்வி ஒரு நிலையான இடத்தில்

இருக்கவில்லை. வடக்கில் இருந்து வெளியேறியவர்களுக்கு மாலை நேரப் பாடசாலை இயங்கியது அதில் கல்வி கற்கும் நேரம் போதாமையினால், எனது தாயின் மூத்த சகோதரி உதவி அதிபராக கடமையாற்றி வந்த கொழும்பு மாபோலை பாடசாலையில் தரம் 6 வரை கல்வி பயின்றேன்.

பின்னர் தரம் 7 முதல் உயர்தரம் வரை பு/புனித சென் மேரிஸ் தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று கொண்டிருந்தகாலத்தில், என்னுடைய உயர் தரப் பரீட்சைக்கு முன்னதாகவே கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனித உரிமைகள் கற்கை நெறியை நிறைவு செய்தேன். 2006ம் ஆண்டு உயர்தரப் பரீட்சையைத் தொடர்ந்து புத்தளத்தில் உள்ள இளைஞர் குழுக்களுடன் இணைந்து செயற்பட்டு வந்ததோடு புத்தளம் மனித உரிமை ஆணைக்குழுவின் மனித உரிமைப் பாதுகாவல் தொண்டராக செயற்பட்டு வந்தேன்.

2008ம் ஆண்டு King's palace mountain child care நிறுவனத்தின் கணனி கற்பிக்கும் ஆசிரியையாக பணி புரிந்தேன். தொடர்ந்து 2009ம் ஆண்டு எனது தந்தை இறையடி சேர்ந்தார். அப்போது எனக்கு 21 வயது. அதனைத் தொடர்ந்து, குடும்பப் பொறுப்புகளை சுமக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதனால் மீண்டும் புத்தளத்திற்கே வந்து அங்கு இயங்கக் கூடிய கணினி வகுப்பபொன்றின் திட்ட இணைப்பாளராக வேலை செய்து வந்தேன்.

எனது கல்வியை தொடர ஆசை யாக இருந்தாலும் குடும்ப சூழல் இடமளிக்கவில்லை. கட்டாயம் உழைத்தே ஆக வேண்டிய சூழல், இளமைக் காலத்தை இனிமையாக கழிக்க நினைத்தாலும் முடியாத சூழ்நிலை இரவு பகலாக உழைத்தேன். ஆனால் ஆண்களைத் தலைமைத் துவமாகக் கொண்ட வேலைத்தளங் களில் என்னால் வேலை செய்ய கடினமாக இருந்தது. அதனால் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட இடங்களில் வேலை செய்ய வேண்டுமென்று முடிவெடுத்தேன்.

எனது தாயுடன் கலந்தாலோசித்து பிறப்பிடத்தில் வேலை செய்தால் என்ன என்று யாழ்ப்பாணத்தில் நடந்த யுத்த வரலாற்றைப் பற்றி எனது தாயுடன் கதைத்த பின்னர் முடிவெடுத்தேன் வடக்கு மக்களின் நல்லிணக்கத்திற்காக சேவை செய்ய வேண்டும் என்ற ஆவல் என்னுள் ஏற்பட்டது. 2011ம் ஆண்டு, Jaffna Civil Society for Equality எனும் நிறுவனத்தில் ஆய்வு, ஊடக அதிகாரி இரண்டிற்கும் ஒருவர் தேவை என்றும்,. ஒருவருடம் ஆய்வாளருக்கான மற்றும் ஊடக பயிற்சியும் சம்பளத்துடன் வழங்கப்படும் என அறிவித்தனர். அந்த வெற்றிடத்தை எனதாக்கிக் கொண்டேன். ஊடகத்துறையை பயின்று கொண்டே எனது ஆய்வுப் புத்தகத்தையும் எழுதினேன். ''எங்களது கதைகளும், எங்களது போராட்டமும்'' என்ற ஆய்வுப் புத்தகத்தில் ''பெண்களும் நிலமும் அவர்களது சொத்துரிமைக்கான செயல்வாதமும்'' என்ற தலைப்பில் எனது ஆய்வுக்கட்டுரை வெளியிடப் பட்டது. அது வடக்கு கிழக்கில் காணப்படும் காணி தொடர்பான சட்டங்கள் பெண்களை எவ்வாறு கையாளுகின்றன என்பது தொடர் பானதாகும்.

தொடர்ந்து ஊடகத்துறையை சார்ந்த கற்கை முடிவடைந்ததும் எனது முதலாவது ஆவணக் குறுந் திரைப்படமான ''நல்லிணக்கம்''

தயாரித்து வெளியிடப்பட்டது. வடக்கு யுத்தத்தின் பின்னர் நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப தமிழ் மற்றும் முஸ்லிம் பெண்களின் பங்களிப்பு தொடர்பானதாக அந்தத் ஆவணப்படம் இருந்தது.

மேலும் வடக்கில் கிட்டத்தட்ட 8 வருடங்கள் எனது பயணம் தொடர்ந்தது அதில், பெண்கள் மற்றும் சிறுமியர்களுக்கு எதிராக இடம்பெறும் பாலியல் துஸ்பிரயோகங்களுக்கு எதிராகவும், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாகவும் மற்றும் காணி உரிமை தொடர்பாகவும் குரல்கொடுக்கும் ஒரு உரிமைச் செயற்பாட்டாளராகவும் எழுத்தாளராகவும் மாறினேன். மேலும் 'வல்லமை' எனும் சமூக மாற்றத்திற்கான குழுவுடன் இணைந்து "வாழ்தலின் ஊடாக வாழ்ந்து காட்டுதல்" எனும் தொனிப்பொருளுக்கு அமைய இயற்கை விவசாயம், வாசிப்பு ஊக்குவித்தல், கூட்டு வாழ்க்கை மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிராக குரல் கொடுத்தலும், ஆதரித்து வாதிடலும், மேலும் துஸ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்டவர்களின் ஆடைகளை சேகரித்து அவர்கள் உரிமைகளுக்காக குரல் கொடுத்தல் போன்ற சேவைகளையும் செய்து வந்தேன்.

என்னுடைய 29வது வயதில் திருமணம் முடித்து பின்னர் புத்தளத்திற்கு வந்து 2018ம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேசியப் பட்டியலில் தெரிவாகி 4 வருடங்கள் புத்தளம் பிரதேச சபையின் உறுப்பினராக இருந்து மக்களுக்கு சேவையாற்றி வந்தேன். பின்னர் எனது இறுதி சேவைக் காலங்களை சகோதர மொழி பேசக் கூடிய தோழியிடம் ஒப்படைத்து விட்டேன்.

தொடர்ச்சியாக இலங்கையின் மனித உரிமை செயற்பாட்டாளராக குறிப்பாக சிறுபான்மை சமுகத்திற்கு எதிராக நிகழ்த்தப்படுகின்ற அனைத்து மனித உரிமை மீறல்களுக்கு எதிராக தொடர்ந்தும் குரல் கொடுத்து வருகின்றேன். கொரோனாவால் பாதிக்கப்பட்டு எரிக்கப்பட்ட ஜனாஸாக்களுக்கு எதிராகவும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட உரிமை மீறல்களுக்கு எதிராகவும் குரல் கொடுத்து வந்ததோடு வறிய குடும்பங்களுக்கான உதவிகளை தனிப்பட்ட ரீதியாகவும் ஏனையவர்களுடனும் இணைந்து அவர்களுக்கான உதவியை செய்து வருகின்றேன்.

கடந்த இரண்டு வருட காலமாக புத்தளம் மாவட்டத்தில் சுயதொழில் செய்யக் கூடிய பெண்களை ஒன்றிணைத்து எந்த ஒரு நிறுவனமயப்படுத்தலும் இல்லாமல் அவர்களுடைய உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகளையும் அவர்களை மேம்படுத்து வதற்கான தொடர் பயிற்சிகளையும் வழிகாட்டலையும் செய்து வருவதோடு இலங்கையின் ஏனைய மாவட்டங்களிலும் சுயாதீனமாக இயங்கக் கூடிய சுயதொழில் பெண்கள் குழுக்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளையும் செய்து வருகின்றேன்.

மேலும் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இலங்கையின் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் திருத்தத்திற்காக குரல் கொடுப்பவர்களுடன் இணைந்து 8 வருட காலமாக பாதிக்கப்பட்ட பெண்களுடன் இணைந்து குரல் கொடுத்து வருகின்றேன். 2022ம் ஆண்டு ஜேர்மனியில் இடம்பெற்ற மாநாடு ஒன்றிற்காக இலங்கயின் சிறுபான்மை மற்றும் தமிழ் முஸ்லிம் பெண்களின் உரிமைக்கான பேச்சாளராக சென்று

வந்தேன். கடந்த வருடம் சிறந்த எழுத்தாளர், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் மற்றும் கிராமிய பெண்களின் மனித உரிமை பாது காவலர் போன்ற விருதுகளையும் பெற்றுள்ளேன்.

மேலதிகமாக ஸ்க்ரீன் பிரின்டிங் டிப்ளோமா மற்றும் ஆயுர்வேத அலங்காரப் பொருட்கள் தயாரிப் பதற்கான டிப்ளோமாவையும் கற்றுள்ளேன்.

பெண்கள் எப்போதும் அவர் களுக்கென்று தனித்துவமான பாதை யில் குழுவாகப் பயணிக்க வேண்டும். குடும்பங்களோடு இணைந்தே அவர்களுடைய தலை மைத்துவப் பயணம் அமைய வேண்டும். பெண்கள் எப்போதும் கற்பவளாகவும் கற்பிப்பவளாகவும் தேடல் உள்ள வளாகவும் இருக்க வேண்டும். என்னை அதிமாக வழி நடத்தி யவர்கள் இலங்கையின் தலைசிறந்த பெண்களே ஆவார்கள்.

---

# புத்தொளி வாழ்நெறி

**ஈ**

1. ஈகம் தவிர் (காமவெறி)
2. ஈசனடி பணி
3. ஈட்டம் தெளிந்து செய் (சம்பாதித்தல்)
4. ஈடழிவு கொள்ளேல் (சீர்கேடு, ஒழுங்கின்மை)
5. ஈடிதம் கைவிடேல் (வழிபாடு)

**உ.**

1. உகந்தார் தெரிந்தெடு (நண்பர்)
2. உட்பகை நீக்கு
3. உபவாசம் சிறப்பாம்
4. உள்ளது பகிர்ந்துண்
5. உணர்ச்சிக்கு இடங்கொடேல்

**ஊ**

1. ஊக்கலர் உறவு பேண் (முயற்சி உடையவர்)
2. ஊசல் தவிர் (மனத் தடுமாற்றம்)
3. ஊழ்குதல் உயர்வு (தியானம்)
4. ஊழல் தவிர்
5.ஊற்றம் கேடாம் (மனக்கிளர்ச்சி)

**எ.**

1. எடுத்தெறிந்து பேசேல்
2. எத்தனம் கைவிடேல்
3. எய்யாமை நீக்கு (அறியாமை)
4. எள்குதல் கேடாம் (இகழ்தல்)
5. எளிஞர்க்கு உதவு
6. எளிமையை நேசி
7. எளியார் பொருள் தொடேல்

**ஏ.**

1. ஏகனை மறவேல்
2. ஏகாந்தம் இனிதாம் (தனிமையும் அமைதியும்)
3. ஏடணை தவிர் (ஆசை)
4. ஏதிலார் நெருங்கேல் (விலைமாது)

**ஐ**

1. ஐக்கியம் சிறப்பாம்
2. ஐசுவரியம் இனிதாம் (கருணை,பரிவு, இரக்கம் போன்ற இறைத்தன்மை)
3. ஐதீகம் களையேல் (பரம்பரை வழக்கம்)
4. ஐயந்திரிபறக் கல்
5. ஐயுறவு கேடாம் (சந்தேகம்)

(தொடரும்)

மணிக்கூ கவி ஹாஜியானி
**செய்னுலாப்தீன் நஸீரா**
ஏறாவூர், இலங்கை.




# நஸ்லின் றிப்கா அன்சார்

எமது சர்வதேச மகளிர் தின சிறப்பிதழாக மலரும் இந்த இதழில் நாம் அறிமுகப் படுத்தும் மற்றுமொரு ஆளுமை நஸ்லின் றிப்கா அன்சார் ஆவார்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள வடக்கே கல்முனை என்னும் ஊராலும் கிழக்கே கடலாலும் மேற்கே வயலாலும் தெற்கே காரைதீவு எனும் ஊராலும் சூழப்பட்ட சாய்ந்தமருது எனும் பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்.

இவரது பெற்றோர் பாத்திமா - முஹம்மது காஸிம் ஆகும்.

ஆரம்பக்கல்வி, உயர்கல்வி இரண்டையும் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் கற்றார். அதே பாடசாலையிலேயே ஆசிரியத் தொழிலில் இணைந்து பின்னர் அதிபர் தரத்திற்கு உயர்த்தப்பட்டு பின்னர் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் பிரதி அதிபராக கடமையாற்றி தற்போது சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஷம்ஸ் தேசிய பாடசாலையில் அதிபராக கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்.

இவரது கல்வித் துறையைப் பற்றி கூறுவதானால் கல்விக் கல்லூரியில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா முடித்துவிட்டு பின் கல்வி மானிபட்டப் படிப்பினை பூர்த்தி செய்துவிட்டு பின்னர் உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா பாடநெறியை கற்று பின்னர் அதிபர் பரீட்சையில் சித்தி பெற்று, பட்டப்படிப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறியை கற்று தற்போது முதுமானிப் பட்டத்திற்காக தயார் படுத்திக் கொண்டிருக்கிறார்.

ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளிலும் கணணித் துறையிலும் தேர்ச்சி பெற்றமை இவரது நிர்வாக செயற்பாடுகளை இலகுவாக்கியுள்ளது.

சிறு வயதில் இருந்தே கலை, இலக்கியத் துறையில் இவருக்கு இருந்த ஆர்வத்தினால் பல படைப்பு களை யாத்துள்ளார்.

தினகரன், வீரகேசரி, நவமணி, விடிவெள்ளி, தமிழ்த்தந்தி, சுடர்ஒளி, மித்திரன், சுபீட்சம், தமிழன், Sunday Observer, Sunday Times, மெட்ரோ லீடர்போன்ற பத்திரிகைகளிலும் ஒளி அரசி, கல்விமானி, எங்கள் தேசம், துணிந்தெழு, தமிழ்நெஞ்சம் போன்ற இன்னோரன்ன சஞ்சிகைகளிலும் மற்றும் பல இணையத்தளங்களிலும் புத்தகங்களிலும் இவரது கவிதைகளும் கட்டுரைகளும் வெளிவந்த வண்ணம் உள்ளன. ஆய்வுக் கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

நவீன கவிதைகள், புதுக்கவிதை கள், மரபுக்கவிதைகள், போன்றனவும் கல்வி, மருத்துவம், சமயம், விழுமியம் சார்ந்த கட்டுரைகளும் இவரால் எழுதப்பட்டுள்ளன.

''வாழ்வியலில் சில வர்ணங்கள்'' எனும் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியிட்டுள்ளார். மிக விரைவில் கவிதை தொகுப்பு ஒன்றை வெளி டவும் உத்தேசித்துள்ளார்.

'Motivational Speaker' ஆக பல மேடைகளில் பேசியுள்ளார்.

கவிதை முகநூல் குழும இணையத் தளங்கள் இவருள் மறைந்திருந்த ஆற்றலை வெளிப்படுத்த களம் தந்தன.

இதன் நிமித்தம் பல விருதுகளை யும் பெற்றுள்ளார். 2015ஆம் ஆண்டு தடாகம் கலை இலக்கிய வட்ட பன்னாட்டு அமைப்பினால் நடாத்தப்பட்ட சர்வதேச கவிதைப் போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்று 'கவித்தீபம்' பட்டமும் இவரது கல்வி, கலை இலக்கியத் துறையை பாராட்டி 'கல்விச்சுடர்' என்ற விருதும் இதே தடாகம் கலை இலக்கிய வட்டத்தினால் வழங்கப்பட்டது.

அத்துடன் LACSDO மீடியா நெட்வொர்க் ஸ்ரீலங்காவினால் 'கலைத்தீபம்' எனும் பட்டம் வழங்கப் பட்டது. 2016 இல் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வுப் பொன் விழா மாநாட்டில் இலக்கியப் பணியை கௌரவித்து விருது வழங்கப்பட்டது. அத்துடன் 2017இல் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தால் கலை இலக்கியத் துறைக்கு பங்காற்றி யமைக்காக «கலைஞர் சுவதம் விருது» வழங்கப்பட்டது. மேலும் 2019 இல் இலக்கிய செயற்பாட்டிற்காக தமிழா ஊடக வலையமைப்பினால் ''இலக்கிய முரசு'' எனும் விருது வழங்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டு '' Best Ser-

vice Award'' எனும் விருது அம்பாறை மாவட்ட அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியினால் மகளிர் தின நிகழ்வில் வழங்கப்பட்டது. இது அம்பாறை மாவட்டத்தில் உள்ள 7 முஸ்லிம் ஊர்களில் உள்ள 7 பெண்களுக்கு வழங்கப்பட்டது.

நிலாமுற்றம் முகநூல் குடும்பத்தினரால் நடத்தப்பட்ட கவிதை போட்டியில் வெற்றி பெற்று ''நிலா கவிஞர்'' பட்டமும் விருதும் இந்தியாவிலிருந்து வழங்கப்பட்டது.

2022-ல் 'செந்தமிழ் சுடர் கலைஞர் விருது' இந்தியாவின் முத்தமிழ் கலைஞர் விருது வழங்கலில் வழங்கப்பட்டது. மீண்டும் 2022ல் ''சிந்தனை மாமணி'' என்னும் விருது காமராஜரின் மாமணி விருது விழாவில் வழங்கப்பட்டது. அதே 2022-ல் தீர்த்தகிரியார் வீர விருது தேசத்தின் வீர விருது விழாவில் வழங்கப்பட்டது. அதேவேளை 2022-ல் ''எழுதுகோல் ஆளுமை'' விருதானது பேரறிஞர் அண்ணாவின் ஆளுமை விருது நிகழ்வில் வழங்கப்பட்டது.

2022.9.17 இல் ''எழுத்தொளி சக்ரா விருது'' தேசத்தின் சக்ரா விருதுகள் 2022 நிகழ்வில் வழங்கப்பட்டது.

2022.10.15 இல் ''எழுத்து மணிச்சுடர் விருது'' கலாமின் சுடர்மணி விருதுகள் - 2022 நிகழ்வில் வழங்கப்பட்டது.

2022.10.24 இல் ''பண்கலை ஒளிச்செம்மல் விருது'' தீபாவளியின் ஒளிச்செம்மல் விருதுகள் 2022 நிகழ்வில் வழங்கப்பட்டது.

2022.12.07 இல் ''தேவனகிரி கொடிமணி விருது'' தர்ம சக்கர கொடிமணி விருதுகள் 2022 நிகழ்வில் வழங்கப்பட்டது.

2022இல் இலங்கையில் நடைபெற்ற தேசிய இலக்கிய விழாவில் பிரதேச இலக்கிய போட்டியில் திறந்த பிரிவில் செய்யுளாக்கப் போட்டியில் 1ம் இடமும் மற்றும் பாடலாக்கப் போட்டியில் 1ம் இடத்தையும் பெற்றுக் கொண்டார்.

மீண்டும் செய்யுளாக்கம் மாவட்ட மட்டத்திலும் 1ம் இடத்தை பெற்றுக் கொண்டது.

அத்துடன் பேராதனை பல்கலைக் கழக சாகித்திய விழாவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் 3ம் இடம் பெற்றுள்ளார்.


இறுதியாக 2023.01.17 இல் «சங்கே முழங்கு விருது» மக்கள் திலகம் எம். ஜி. ஆரின் வள்ளல் விருதுகள் 2023 நிகழ்வில் வழங்கப்பட்டது.

இவரது ஆர்வத்திற்கும் முன்னேற்றத்திற்கும் முதலாவதாக இவருடைய அன்புத் தந்தையும் அடுத்ததாக ஆருயிர்க் கணவரும் முக்கிய காரணமாக அமைந்தார்கள்.

இவருடைய தந்தை ஒரு கவிஞரும் வரலாற்றாய்வாளரும் ஆவார். இவர் ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியருமாவார். இவரது கணவர் தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் ஆங்கில விரிவுரையாளராக கடமையாற்றுகிறார். வாழ்வின் சுவையை மேலும் அதிகரிக்க சுட்டித்தனமான ஒரு ஆண்பிள்ளையும் இவருக்குண்டு. குடும்பம் ஒரு கதம்பம் என்பதுபோல மனம் நிறைந்த வாழ்க்கை அமைந்ததை நினைத்து இறைவனுக்கு நன்றி கூறிக் கொள்கிறார்.







## ஆளுமை அறிமுகம்

# கலாபூசணம் சுலைமா சமி இக்பால்

தர்கா நகரைப் பிறப்பிடமாகக் கொண்ட கலாபூஷணம் சுலைமா சமி இக்பால் ஆகிய நான் முப்பது வருடங்களுக்கு மேலாக மாவனல்லையில் வசித்து வருகிறேன். 45 வருடங்களுக்கு மேலாக இலக்கியம் படைத்து வரும் நான் சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம் என 6 நூல்களை வெளியிட்டுள்ளேன். எழுத்துக்காக நூற்றுக்கணக்கான போட்டிகளில் கலந்து தங்கப் பதக்கங்களும் பரிசுகளும் பெற்றுள்ளேன்.

சர்வதேச ரீதியிலும் சிறுகதை, நாவல், கவிதை ஆகிய போட்டிகளில் பரிசுகளும் வென்றுள்ளேன். திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையத்தில் சிலகாலம் பார்வையிழந்தவர்களுக்குக் கற்பித்துள்ளேன். அன்றிலிருந்து இன்று வரை எனது புத்தகங்களை குரல் வடிவில் பதிவு செய்து அவர்களுக்கு வழங்குவதைப் பழக்கமாக்கிக் கொண்டுள்ளேன். அதே போல் எனதும் , என் மகள் இன்ஷிரா இக்பாலின் புத்தகங்களையும் இலங்கையின் பார்வையற்றோர் சங்கம் இறுவட்டாகப் பதிவு செய்துள்ளது. இவற்றை வெளிநாடுகளிலும் உள்ள விழிப்புலன் இழந்தவர்கள் கேட்டுப் பயன் பெறுவது மகிழ்ச்சிக்குரியது. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே... அல்ஹம்துலில்லாஹ்.

1997ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடளாவிய ரீதியில் நடத்திய ஒரு சிறுகதைப் போட்டியில் நான் 'திசை மாறிய தீர்மானங்கள்' என்ற தலைப்பில் ஒரு சிறுகதையை எழுதினேன். அந்தக் கதையை என்னை எழுதத் தூண்டியவர் என் அன்புக் கணவர் மாவனல்லையைச் சேர்ந்த மர்ஹூம் அல்ஹாஜ் மௌலவி ஏ.சீ.எம். இக்பால் (பாஸி) அவர்கள் தான். நான் எழுதிய பல கதைகளுக்கு நல்ல கருக்களைத் தந்தவர் என் அன்புக் கணவர் தான் என்பதை மகிழ்வுடன் தெரியப் படுத்திக் கொள்கிறேன். 35 வருடங்களுக்கும் மேலாக பள்ளி வாசல்களில் கதீபாக இருந்து சமூகத்தோடு நெருங்கிப் பழகி சமூகப் பணிகளில் அதிகம் ஈடுபட்டவர் அவர்.ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நடத்திய சிறுகதைப் போட்டியில் எனது 'திசை மாறிய தீர்மானங்கள்' சிறுகதைக்கு முதற் பரிசு கிடைத்தது. அல்ஹம்துலில்லாஹ்.

1997 ஆம் ஆண்டு மாத்தளையில் நடந்த பெருவிழாவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தலைவர் அல்ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களால் தங்கப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப் பட்டேன்.

இதுவரை பல போட்டிகளில் கலந்து பல தங்கப் பதக்கங்களைப் பெற்ற போதும் இந்தத் தங்கப் பதக்கம் சுத்தமான தங்கத்தால் செய்யப்பட்டு 2 ½ பவுண் எடை கொண்டதாக இருந்தது.

எழுத்துப் பணியில் ஆக்கத்தையும் ஊக்கத்தையும் தந்த எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கும், அந்தக் கதையை எழுதக் காரணமான என் அன்புக் கணவருக்கும், தங்கப் பதக்கத்தைத் தந்த அல்ஹாஜ் அஷ்ரப் அவர்களுக்கும் என் நெஞ்சு நிறைந்த நன்றிகள் என்றும் இருக்கும்.

நான் 2002ம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் இஸ்லாமிய இலக்கியப் பங்களிப்புக்காக விருது, அகில இன நல்லுறவு ஒன்றியம் நடத்திய 2008 ஆம் ஆண்டிற்கான சாமஸ்ரீ பாராட்டு விழாவில் சாமஸ்ரீ கலாஜோதிப் பட்டம் மற்றும் விருது, அகில இலங்கை தேசிய கவி சம்மேளனத்தினால் 2013 ஆம் ஆண்டு காவிய பிரதீப (கவிச்சுடர்) பட்டம், 2016 ஆம் ஆண்டுக்கான தடாகம் விருது விழாவில் தமிழ் மாமணி விருது என்பன நான் பெற்ற விருதுகள்,பட்டங்களில் சிலவாகும்.

2018 ஆம் ஆண்டு சப்ரகமுவ மாகாணத்தில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் பணப்பரிசும், விருதும் வழங்கப்பட்டது. 2020ஆம் ஆண்டிற் கான அரச கலாபூசணம் விருதும் பணமும் வழங்கி கௌரவிக்கப் பட்டேன்.

என்னுடைய சிறுகதைகள் அனைத் தும் கற்பனைக் கதைகள் அல்ல. உண்மைச் சம்பவங்களை வைத்தே எழுதியுள்ளேன். இலங்கைத் தென் கிழக்குப் பல்கலைக் கழகம், பேராதனைப் பல்கலைக் கழகம் என்பவற்றில் தமது தமிழ்ச் சிறப்புக் கலைமானிப் பட்டத்தைப் பூர்த்தி செய்வதற்காக எனதும், என் மகள் இன்ஷிரா இக்பாலினதும் சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம் என்ப வற்றை ஐந்து மாணவர்கள் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித் துள்ளமை குறிப்பிடத் தக்கது.

கடைசியாக நான் எழுதிய 'உண்டியல்' சிறுகதைத் தொகுதியில் உள்ள. அனைத்தும் பரிசு பெற்ற கதைகளாகும்.

# லைலா அக்ஷியா

மொறட்டுவ


அடுப்பிலிருந்து ஆவிபறந்த இடியப்பத்தை இறக்க, மேலெழுந்த நீராவி ஷபாவின் முகத்தில் சுட்டது. மாமாவுக்கு சிவப்பரிசி மாமிக்கு வெள்ளையென வேறுவேறாக ஊற்ற வேண்டும்.

மாமி ரொம்ப கோபக்காரி. சொதியின் நிறம் முதல் கொண்டு பார்த்து ஏதாவது ஒன்றைச் சொல்லி மனதைநோகடித்து விடுவார்.

''என்ன நேத்து வந்த மகராணி இன்னும் ரூமவுட்டு வரலையோ?'' மாமியின் தோரணை கலந்த குரல் பக்கத்தில் கேட்க திடுக்கிட்டாள்.

''இல்ல மாமி.. பாவம் அவ. ராவெல்லாம் முழிச்சிட்டு யோசிச்சிட்டே ஈந்தா.. நெறைய அழுதிட்டா.

''வளத்து ஆளாக்கி கல்யாணத்த முடிச்சி கொடுத்தா மாப்புள்ளையோட சேந்து போக தெரிஞ்சுக்கணும்.. இப்படி தூக்கி போட்டுட்டு வாரவளுவல கொஞ்சவா?

இவளுக்கும் போய்த்து லண்டன்ல ஈந்து வந்த ஏன்ட மச்சான முடிச்சி கொடுத்தனே.. எனக்கிலயா வெக்கமா ஈக்கிதிப்ப''

''மாமி இந்த மொற சரி கொஞ்சம் அவட நெலமய பாத்து..'' ஷபா முடிக்க முன்

''போதும். நீ பெய்த்து கேட்டன் குஷன் எல்லாம் கழுவு. ரெண்டு வருசத்துக்கு பொறவு ஒஸ்ட்ரேலியால ஈந்து மகள் வாரதுக்கு அஞ்சாறு நாள் தான் ஈக்கி.. இந்த நேரத்துல இப்படி ஒரு முஸீபத்து..'' வெடித்துவிட்டு சென்றாள் கமரூன்.

இப்படித்தான் அவள். வீட்டின் மொத்தத்துக்கும் சர்வதிகாரி.எத்தனை பேருக்கு வலித்தாலும் அவளுக்கு



அது ஒரு பொருட்டே இல்லை.

'ஹம்தா' - இந்த வீட்டின் புத்திரி. நேற்று மாலை தனியாக இங்கு வந்தவள்.ஏதோநடந்திருக்கவேண்டும். கணவன் என்ற ஒரு கயவனால் கசக்கிப்போடப்பட்டிருந்தது அவள் வாழ்க்கை.ஆட்டோவிலிருந்து இறங்கும்போதே ஹம்தாவை கண்டு கலங்கிவிட்டாள் ஷபா. அடித்திருப் பான். கண்கள் சிவந்து, வலது கன்னமும்,நெற்றியும் வீங்கியிருந்தது.

ஹம்தாவுக்கு என்ன குறை?19 வயதில் பல்கலைக்கழகம் போக இருந்தவளை பாதியில் நிறுத்தி, திருமணம் செய்துகொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டவள் அவள். இலட்சியக் கனவுகளை கலைத்த,லண்டனிலிருந்து வந்த கமரூனின் மச்சானுக்கு அப்படியே கட்டிக் கொடுத்து விட்டார்கள். ''கமரூன் .. என்னதான் ஒங்கட மச்சான் என்டாலும் என்னசரி பழக்கமீக்கானு கொஞ்சம் தேடிப்பார்த்தா. என்ட ஒரே ஒரு மக அவ..''

''என்ன?அவனுக்கு என்ன கொற? என்னத்த படிச்சி பட்ட மெடுத்தாலும் எவன சரி முடிச்சி குடுக்கத்தான் வேணும்.. இந்த பாருங்க ஏன்ட குடும்பத்தை பத்தி எனக்கு தெரியும்..

இப்டி உட்டா நாளக்கி எவன்சரி ஒருத்தனோட வந்து நிப்பா ஒங்கட மகள்..

அப்ப தேடுங்க அவன பத்தி..''

அன்று கமரூன் கணவனென்று கூடப் பார்க்காமல் கத்தியதில், பயந்து ஊமையாகி போயிருந்தாள் ஹம்தா.

திருமணம் நடந்தது. கொஞ்ச காலம் தான் எல்லாமே.ஏற்கனவே எல்லா கெட்டபழக்கத்திற்கும் அடிமை யாகியிருந்த ஒரு மிருகத்துடன் அவள், நிம்மதியாக வாழவில்லை என்று தெரிந்தும் கூட இவள் சார்பில் பேச அவன் குடும்பமோ,கமரூனோ முன் வரவேயில்லை.

நேற்றிரவு அழுதுகொண்டே சொன்னாள். ''ஷபா மைனி ..மமா என்னொட பேசறாங்களே இல்ல. முகத்த கூட பாக்கல்ல. வெட்டு வெட்டுனு பேசுறாங்க. எனய எப்ப புரிஞ்சி கொள்ளப்போறாங்க? எனய எப்பயுமே ஒரு மகளா அவங்க நெனைக் கிறதே இல்ல..''

''தெரியும்மா ஹம்தா.. நா ஓன்ட மைனி மட்டுமில்லடா. சின்னத்துல இருந்தே நீயும் நானும் பெஸ்ட் பிரன்ட்ஸ்.எனக்கு தெரியும்டா உன் கஷ்டம்..''

''ஒனக்கு மறைக்கிறதுக்கு என்ன இரிக்கி. இந்த பாரு ஷபா..'' அவள் ஆடையை விலக்கி முட்டங் கால்களுக்கு அருகில் காட்டினாள். அங்கே அடிபட்டு பச்சையும் நீலமுமாக சிவந்து வீங்கியிருந்தது.

''அய்யோ என்னடா இது...''

''அவன் மனுசனே இல்ல ஷபா. எனய வச்சி குடிச்சிட்டு படுத்துற பாடு..

இனி நான் அவன்கிட்ட போகவே மாட்டேன். எனக்கு டிவோஸ் எடுத்து தர சொல்லபோரன்.. முடியல்லமா.. இனி ஏன்ட ஊட்லயே, உங்களோட வாழ்ந்து கொள்றேன்..'' குலுங்கி குலுங்கி அழுதாள்.

அவள் சொன்ன விடயத்தில்

''இந்த வீட்டில்'' என்று சொன்ன வார்த்தையை கேட்டவுடன் ஷபாவின் மனது இன்னும் வேதனைப்பட்டது.

''ஹம்தா அழாதடி.. நான் பேசுறேன். ஒரு பொண்ணா நான் ஒனக்கு நியாயம் பேசாட்டி வேலயே இல்ல.. இனியும் யாரும் ஃபோர்ஸ் பண்ணி உன்ன அனுப்பி வைக்க ஏலா..''

''மமா என்ன புரிஞ்சு கொள்ளனுமே.. அவன்கூட அவங்க குடும்பமா இருக்கிறான். அவங்க ரொம்ப ப்ரெஸ்டீஜ் பாக்றாங்க..'' மீண்டும் அழுதாள்.

''..ஆமாம் பெண்கள் இந்த அளவு கஷ்டப்பட ஆண்கள் மட்டும் இல்ல பெண்களும் தான் காரணம்.» மனதுக்குள் சொல்லிக் கொண்டாள் ஷபா.

முகத்தை இறுக்க பொத்திக் கொண்டு, மேலே பேச முடியாமல் அழுதுகொண்டே தொண்டை அடைத்து இருமினாள் ஹம்தா.

''ஹம்தா மா... நாளைக்கு பேசலாம்... எப்படியும் இதுக்கு ஒரு முடிவு உனக்கு கிடைக்கும் சரியா? நாலு வருஷமா வெளி உலகத்துக்கு ஒரு வாழ்க்கையும் வீட்டுக்குள்ள இன்னொரு வாழ்க்கையும் வாழ்ற உன் போராட்டம் இந்த குடும்பத்திற்கு தெரியாம இல்ல.

புரிஞ்சிகொள்ளுவாங்க.. இப்ப எதையும் யோசிக்காம தூங்குமா. ஏதாவதுனா என்ன எழுப்பாட்டு சரியா?...''

ஷபா அவள் நெற்றியை முத்த மிட்டு தலையை தடவி கொடுத்து விட்டு நகர்ந்தாள்.

''இறைவா.. இந்த குடும்பத்தில் நா பட்ற கஷ்டத்துக்கு ஒரு பதில கேட்டேனே.. ஆனா இன்னொரு வாழ்க்கையும் இப்படி கலங்கிட்டு வந்திருக்கிதே..

எங்கட மனசுக்கு தைரியத்த தந்திடு நாயனே..'' பின்னிரவில் முஸல்லாவில் அழுதாள் ஷபா..

*****

அடுத்த நாள்.

வழமையான காலை என்று இல்லாமல் ஒரு பரபரப்பாக பத்து மணியை காட்டியது.

மாமா, கமரூன் கையாட்டி, தலை யாட்டி காதும் காதும் வைத்தால் போல் பிரச்சினை பற்றி பேசிக் கொண்டு இருந்தார்கள். ஹம்தா, ஷபா பொறுமை இல்லாமல் கதவருகே நின்று கொண்டிருந்தனர்.

''இவ இப்படி ஊட்டுக்கு வந்தது கூட யாருக்குமே சொல்லல்லை. தெரிஞ்சா ஏன்ட மானம் தான் போவும்.

ஒஸ்ட்ரேலியால ஈந்து மாஜி வாரத்துக்கும் அவக்கு கலியாணம் பேசுறதுக்கும் நெனச்சீக்கிற நேரம். இத தெரிஞ்சா ஏன்ட குடும்பத்த பத்தி என்ன நெனப்பாங்க.. முகத்துல துப்பிட்டிலயா போவாங்க..?''

''இல்ல மமா...''

''என்ன இல்ல? ஆம்புளனா அப்டி இப்படிதான் ஈப்பான்.. போய் சேந்து வாழ்ற வழிய பாரு. ஏய் புத்திய சொல்லி அனுப்பி வைங்கோ..

சொல்லிட்டேன்..'' ஹம்தாவை பேச விடாமல் கமரூன் நெருப்பாய்ப் பேசினாள்.

யார் மறுபேச்சு பேச போகிறார் கள்? வீட்டின் ஆட்சி அதிகாரம் அவள் கையில். அவளைப் பகைத்துக் கொள்ள யாருக்குமே தைரியம் வராது. பொல்லாத நச்சுப்பாம்பு அவள். எப்பொழுதுமே வார்த்தைகளில் விஷம் தெறிக்கும்.

''பாருங்க மகள்.. மருமகன கூப்புட்டு நாங்க பேசுறோம். இப்படி தனியா வந்து என்னத்ததான்மா சாதிக்கப் போற..? சொல்றத வெளங்கிகோங்க..'' பெற்ற கடனுக்கு வாப்பா வாய்திறந்தார்.

''எனக்கு இனி அவன் வாணம்.. எனக்கு டிவோர்ஸ் எடுத்து தாங்க. எத்தன மொற பாத்திட்டீங்க. நீங்களும் மமா போல ஒன்னும் தெரியாத மாறி பேசாதீங்க வாப்பா...''

''ஏய் ஹம்தா என்ன வாய டிக்கிறா..'' கமரூன் எகிறினாள்.

''மாமி.. அவ சொல்றத கொஞ்சம் கேளுங்க. இப்படி அடி வாங்குற அளவுக்கு அவகிட்ட சக்தி இல்லை மாமி..ஒரு பொம்பள சாதாரணமா ஒரு வாழ்க்கை வேணாம்னு வந்து சொல்ல மாட்டா .

அவ எவ்வளோ கஷ்டப்பட்டு இருந்தா இப்படி ஒரு முடிவ எடுப்பான்னு புரிஞ்சி கொள்ளுங்க..'' ஷபா குறுக்கிட்டு சொன்னாள்.

''லண்டன்லயே வளர்ந்தவன் இனி அப்படிதான்.. அனுசரிச்சு போறதுக்கு மொதல்ல நீ தான் தெரிஞ்சுக் கொள்ளணும்..''

''அனுசரிச்சு போறதா? என்னமா பேசுறீங்க..? உங்கட பேச்சிக்கி மறுப்பு சொல்ல கூடாதுனு மௌனமா இருந்ததால தானே ஏன்ட வாழ்க்கையே நாசமாச்சி.. இனியும் என்னால முடியாது மமா''

''பாரு.. பணம் வசதி இல்லாதவன போய் பாரு.. எங்களையே எடுத் துக்கோ.. ஓன்ட வாப்பா நான் சொல்றத கேளு ஹம்தா..»

''யேன் இப்டி பணம் கௌரவம்னு என்ன சாகடிக்கிறீங்க எல்லாரும்..?''

''என்ன ? ஒண்டோ மாப்ளயோட சேந்து வாழு. அதில்லாம இந்த ஊட்ல மட்டும் வந்து ஈக்கிறதுக்கு நெனைச்சும் பார்த்திராதே..சொல் லிட்டென்...'' வெட்டு ஒன்றாய் சொல்லி விட்டு உள்ளே சென்றாள் கமரூன்.

''மாமி.. ஒரு சில விஷயங்களை திருத்தி சேர்ந்து வாழலாம். அவ நிம்மதியா இரிக்கிறாளானு பார்த்தீர்களா? அவ படுற கஷ்டத்தை பாத்தீங்களா? அவ யார்கிட்ட இதெல்லாம் சொல்வா இனி?..'' ஷபாவின் வார்த்தைகள் வலியோடு வெளி வந்தது.

''நீ வாய மூடு.. என்ன வக்கா லத்தோ?? அனாதயா இருந்து, இந்த ஊட்டுக்கு கலியாணம் முடிச்சி வந்தவ தான நீ..? ஒனக்கும் பங்கு இரிக்கின்னு ஆடாத.. பெருசா வாழ்ந்து கெட்டவள் மாரி பேச வந்துட்டா...» கமரூனின் ஈட்டி வார்த்தைகளுக்கு பதில் சொல்ல முடியாமல் ஷபா அழுதுகொண்டே உள்ளே சென்றாள்.

''வாப்பா..என்ன வாப்பா இதெல் லாம்? இந்த பேச்சுவார்த்தை சரியான ஒரு முடிவுக்கு வரமாட்டாது என்று ஹம்தாவுக்கு புரிந்து விட்டது.

வாப்பாவின் தலை குனிந் திருந்தது. அவரால் பதில் பேச முடியாது. கமரூனின் பேயாட்டத்தில் தன் சுயத்தை இழந்து விட்டவர்அவர்.

ஆம். வாப்பாவுக்கு கமரூன் இரண்டாம் தாரம். உம்மா இருக்கும் போதே, சொத்துக்கு ஆசைபட்டு கமரூன் வாப்பாவை வளைக்க, அவரும் அதில் விழ, திருட்டுத்தனமாக இருவரும் திருமணம் செய்தார்கள். இதில் பாதிக்கப்பட்டது ஹம்தா, அவள் தாய், அவள் ஒரேயொரு சகோதரன் என்று மூவர் கொண்ட அந்த அழகான குடும்பம்.

உம்மா பரம்பரை பணக்காரி. அப்பாவி. தன் பெயரில் இருந்த எல்லா சொத்தையும் மகன், மகள் பெயரிலேயே எழுதிவிட்டு இதே கவலையில் அந்த உயிர் மௌத்தாகி யும் போனது.

அன்றிலிருந்து இந்த வீட்டுக்குள் வந்து திட்டம் போட்டவள் தான் கமரூன். வசதியோ, சொத்தோ தன் கைவிட்டுப் போய் விடக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக ஒவ்வொரு திட்டத்தையும் போட்டாள். தனக்குப் பிறந்த மகள் மாஜியை, இந்தக் குடும்பத்தோடு அண்ட விடாமல், அவுஸ்திரேலி யாவுக்கு தன் குடும்ப சகோதரத்தோடு அனுப்பி விட்டாள்.

ஒரேயொரு நானா.ஷபாவை காதல் திருமணம் செய்தான். விதி. வெறும் ஒரு வருடத்தில் திடீர் விபத்தில் இறந்து போய்விட்டார்.இப்போதைக்கு நான்கு வருடங்களாகின்றன. அன்றிலிருந்து இதே வீட்டில் வாழ நிர்ப்பந்திக்கப் பட்டாள் ஷபா. தாய் தந்தை இல்லாத அவள் ஏழ்மையை காரணம் காட்டி தனக்கும், வீட்டுக்கும் ஒரு வேலைக்காரியாகவே ஆக்கி இருந்தாள் கமரூன்.

இரவு பதினோரு மணி.

ஹம்தா தீவிரமாக யோசிக்க தொடங்கினாள்.

காலையில் கமரூன் தொலைபேசி யில் யாரோடோ பேசப்பட்ட வார்த்தை கள் இடிகளாய் நினைவிற்கு வந்து போனது.. ''வாழா வெட்டிக்கெல்லாம் ராஜ வாழ்க்க வாழ வக்கிறதுக்கா இந்த ஊடு.?»

«நா என்னத?என்ன விட 15 வருஷம் மூப்புல ஒருத்தன கலியாணம் பண்ணிட்டு சொத்து வாணம், ஊடு வாசல் வாணம்னு சொல்ல தியாகியா..?''

''இதெல்லாம் நானும் என்னோட மகளும் அனுபவிக்க வேண்டியது.. அதை எந்தக் காலமும் வெளில போக உடமாட்டேன்..''

வார்த்தைகள் ஒன்றன் பின் ஒன்றாக அவள் காதுகளில் இன்னும் எதிரொலித்துக் கொண்டே இருந்தன.

வாப்பா பக்கத்தில் வந்தது கூட கவனிக்கவில்லை..

''ஹம்தா...யோசிக்காதமா எனக்கு. என்ன பேசறன்னே தெரியல்ல..''

''ஏ வாப்பா.. ? நீங்க இந்த அளவு தலை குனிஞ்சி நிக்கிறீங்க..?''

''இந்த வாழ்க்கை நானா தேடிக் கொண்டது ஹம்தா.. உன்ன பெத்த தாய்க்கு நான் செஞ்சத்துக்கு தான் இப்ப அனுபவிக்கிறேன்..''

“யேன் வாப்பா? உம்மாக்கு, ஒரு கணவனா கொடுக்க வேண்டிய ஆகக்குறைந்த அந்த உண்மையான அன்பு கூட கொடுக்காம, கதற உட்டீங்க?

துரோகம் செஞ்சி மனநோயாள யாக்கினீங்க. அவங்கள குணப் படுத்தறத விட்டுடு அதையே சாட்டா வச்சு உங்க இஷ்டத்துக்கு முடிச்சீங்களே வாப்பா..” வாப்பாவின் நீண்ட மௌனம் அந்த நிசப்தத்தை இன்னும் வேதனை ஆக்கியது.

“இவ்வளவு நடந்தும் அவங்கள ஒரு சாச்சியா பாக்காம தாய்க்கு கொடுக்கிற மரியாதை தானே வாப்பா கொடுத்தேன்? இனிமேயும் எனக்கு அவங்க ஒரு தாயா இருப்பாங்கன்னு நினைக்கிறீங்களா வாப்பா..? ஹா?”

“ஹம்தா.. ஒங்களுக்கு நடந்த தெல்லாம் அநியாயம் தான் மவள். எனய மன்னிச்சிடு மா..” வாப்பாவின் வார்த்தையில், அவர் மனதும் கண்களும் கனத்ததாக காட்டியது.

“அநியாயம் தான் வாப்பா..இந்த வந்த ஷபாக்கு கூட இந்த அநியாயம் தானே நடக்குது? வாழவேண்டிய ஒரு பெண்ண சுயநலத்துக்காக இப்படி அடச்சி வச்சு இருக்கீங்களே.. இதுல என்னோட பிரச்சினைகளை எப்படி முடிப்பீங்க? பேச வேண்டிய இடத்திலெல்லாம் பேச முடியாம இப்பிடி இருக்கிறதே உங்களுக்கு ஒரு தண்டனதானு புரிஞ்சிக்கொள்ளுங்க வாப்பா..”

(வாப்பாவின் அதே விசும்பல்)

‘இனி என்னோட பிரச்சினை நானே முடிவெடுக்கிறேன்.. சரி நீங்க போங்க வாப்பா. மமா கண்டா இதுக்கும் உங்களுக்கு கத்துவாங்க..”

இரவு நெடுநேரம் கடந்தபின் ஷபாவின் அறையை தட்டினாள் ஹம்தா. நிச்சயம் அவள் தூங்கவில்லை என்று தெரியும்.

“ஷபா உன்கிட்ட ஒரு விஷயம் சொல்ல வந்தேன்..”

“சொல்லு.. ஹம்தா”

“நான் என்னோட வாழ்க்கையை முடிவெடுத்துட்டேன்..”

“நம்மட சொத்துக்காகவும், பிரயோ சனம் இல்லாத இந்த கௌரவத்துக் காகவும், மனசாட்சி யில்லாம எங்கட வாழ்க்கையை அடமானமா வச்சி அதிகாரம் பண்ண எந்த தகுதியும் இல்ல இவங்களுக்கு..”

“ம்..நீ சொல்றது உண்மதான் ஹம்தா. என்னாலயும் உன்னாலேயும், அவங்களோட பேசி வாதாட முடியாத நிலைமைக்கு எங்களை வைச்சிருக்கி றாங்கமா..”

“ஷபா.. நான் போறேன் ஷபா.. யாருக்கும் எந்த அநியாயமும் செய்யாத ஒரு பெண்ணுக்கு இப்படி ஒரு அநியாயம் நடக்குதுன்னா.. அதுவே அவளை தட்டி எழுப்பி, அவக்குள்ளே இருக்கிற தன்மானத்தை தூண்ட இல்லன்னா..அவ கஷ்டப்பட்டதற்கும், பெண்ணா பொறந்ததுக்கும் அர்த்தமே இல்லை. என்னோட உம்மா போல அநியாயத்துக்கு இவங்க காலடில கடைசிவரை கதறிட்டே இருப்பேன்னு இவங்க நினைச்சுட்டு இருக்காங்க..”

“உண்மைதான்.. ஹம்தா.”

“நான் நல்லா யோசிச்சிட்டேன்.

எங்கேயும் போய் அழுதுட்டு இருக்க நான் ஒன்னும் படிக்காதவ இல்ல.இவ்வளவு நாள் காலம் என்ன முட்டாளாக்கி வைச்சிருந்தது இன்னக்கி இனியும் புரிந்து கொண்டேன் இனிமுட்டாளாக்க முடியாது..»

"நீ சொல்றது சரி ஹம்தா.. இந்த வாழ்க்கைல இருந்து வெளிவர இவங்க உடவே மாட்டாங்க"

"ம்.. அது தெரியும் எதுக்கு அவங்க? இது என்னோட வாழ்க்க. ஒவ்வொரு அடியும் எனக்குத்தான் விழுந்து கொண்டிருக்கிது. நானே டைவர்ஸ் போடுவேன்.. என் வாழ்க்கய நான் வாழப்போறேன்.."

''என்ன பண்ண போறாய் ஹம்தா..?"

"என்ன மாதிரி உன்ன மாதிரி, என் உம்மாவப்போல பாதிக்கப்பட்ட எத்தனையோ பெண்களுக்கு அவங் களுக்கு தன்னம்பிக்கையை கொடுக்க ஒரு மீட்பு அமைப்பு தொடங்குவேன்.. என் சொத்துக்கள் பணம் எல்லாமே இதுக்காக யூஸ் பண்வேன்.. இவங்க முன்னாடியே வாழ்ந்து காட்டனும்டி. இதுதான் இவங்களுக்கு சவுக்கடி.." கேட்கும் ஷபாவின் உள்ளம் குளிர்ந்தது.

"ஹம்தா.. ஒரு ரிக்வெஸ்ட்.. கேப்பியா?"

"என்ன ?"

''நீயும் நானும் இப்படி இருக்கிறது ஒன்னும் பொறுமைனு சொல்றதுக்கு எல்லாம் இல்லனு புரிஞ்சிகொண்டேன்.."

"நிச்சயமா.."

''குனியக்குனிய குட்டிட்டே இருக்கும் இவங்கள மாதிரி மனசுள்ள வங்க எனக்கும் வேணாம்.ப்ளீஸ் என்னையும் கூட்டிட்டு போவியா.. ஒரு காலத்துல ஸ்கூல்ல சொல்லுவமே.. எங்களுக்குன்னு ஒரு வாழ்க்கை. ஒரு கம்பெனி. அதுல நீ எம்டி. நா செக்கட்ரி.. அப்படியே வாழுவோமா.? தயவு செஞ்சு என்னையும் கூட்டிட்டு போ. நீ இருக்கிற இடம் எனக்கு தைரியமா இருக்கும் இந்த இடம், இந்த போலி உறவு எதுவுமே எனக்கு வேணாம்" வலியோடு சொன்ன ஷபாவை கட்டியணைத்தாள் ஹம்தா.

'மனசாட்சியையும் மானத்தை யும் இழந்து வாழ்றத விட சுயமரி யாதையோடு நிம்மதியா தனியாவே வாழ்ந்திடலாம்' என இருவருக்குள்ளும் ஒரே எண்ணம் ஓடியது.

ஒரு பெண்ணோட மதிப்பு எவ்வளவு பொறுமதின்னு சொல்லி நாங்க ரெண்டு பேரும் காட்டனும்.. இரு உள்ளங்களும் சொல்லிக் கொண்டன.

நியாயங்களும், உரிமைகளும் எப்பவுமே தோற்காது. ஆனால் அதற்கு சந்தர்ப்பம் தேடிக்கொடுப்பதும் அதற்காய் போராடுவதும் ஏனோ அவரவர் பொறுப்பாகிவிடுகிறது.

மறுநாள்..

ஹம்தா, ஷபாவாசலில் இறங்க முற்பட்ட போது குரல் கேட்டது..

அவுஸ்திரேலியா கோலில் கமரூன் சத்தமாக யாரோடையோ வீறிட்டுக்கொண்டிருந்தாள்.

''ஏன்ட அல்லாவே.. அவள எவ்ளோ நம்பினேன்.. இப்பிடி

வெள்ளக்காரனோட பொய்ட் டாளே...” ஓவென அழுகை உள்ளே கேட்க, அடி எடுத்து வைத்த ஷபா திரும்பி முதன்முறையாக அந்த வீட்டை ஒரு சவாலோடு பார்த்தாள்.

அதில் ஆயிரக்கணக்கான பதில்கள் வெளிப்பட்டது. திரும்பி நடந்தார்கள்.

குளிர்ந்த காற்றை முதன்முதலாக சுவாசித்துணரந்த இரு உயிர்கள் மலர்ந்து ஒருவரையொருவர் பார்த்து புன்னகைத்து கொள்ள, நான்கு கால்களும் துணிவோடு பயணித்தன..

அடக்குமுறை வாழ்வில் அழகு படுத்தப்பட்ட அடிமைத்தனத்தில்.. ஆயிரம் ஷபாக்களுக்கும் ஆயிரம் ஹம்தாக்களுக்கும் இனி மாறுவார்கள் என்ற நம்பிக்கை உலகெங்கும் துளிர்க்கிறதங்கு!

## வேண்டாம் நீயும் செய்திடாதே

அன்பான எந்தன் தோழி
அழகான சலாம் உனக்கு
எந்தனன்பு அறிவுரை தன்னை
இயன்றால் நீயும் விட்டிடாதே.

நவீன உலகம் நமக்களித்த
நல்ல விடயம் இக்கைபேசியதனால்
நாலுபேரின் இச்சைகளுக்கு
நாளும் வழிகள் செய்திடாதே.

உனக்காய் ஒருவன் உடனிருக்க
உன்பிள்ளைகளுக்காய் அவனும் வாட
ஒரு மணித்துளி தன்னும்வேறு
ஒருவனிடம் உனைநீ இழந்திடாதே.

உடன்பிறப்பு என்று சொல்வார்
உடனே கடனும் தந்து நிற்பார்
ஒருபோதும் அவற்றை நம்பி
ஒழுக்கம் தன்னை விட்டிடாதே.

உந்தன் செயலின் இழிவுகண்டு
ஊரே ஒருநாள் எதிர்த்து நிற்க
பாசம்காட்டும் பிள்ளைகூட
பழிச்சொல் கேட்டுப் பதறவிடாதே.

கைப்பேசி என்பது கட்டாயம்தான்
கைதவறிப் போனால் கைசேதம்தான்
கடுகளவு நேரமும் உன்னையிழந்தால்
கடைசியில் அவமானம் மறந்திடாதே.

உண்மை ஆன தேவைக்காக
உந்தன்போனை வைத்துக் கொள்வாய்
வேறுவேலை அதனுடன் இருப்பின்
வேண்டாம் நீயும் செய்திடாதே.

**முப்லிஹா பிர்தவ்ஸ்**
காத்தான்குடி

## தேடல்

மறுபரிசீலனையற்ற இரவுகளை
மட்டுமே நான் விரும்புகிறேன்

எந்த இரவும் எனக்கு அப்படி
வாய்த்ததில்லை...

இதோ இப்பொழுது குளிர குளிர
பொழிந்து கொண்டிருக்கும்
பனிக்கால இரவுகள்போல
சில நினைவுகள்
இருதயம் முழுக்க குளிர்மையை
பரப்பிவிடுகிறது....

அந்த அதீத குளிரை
தாங்கமுடியாதவளாக
ஒருகோப்பை நிறைய
தேநீரும் துண்டு போர்வைக்குமாக
தேடியலைகிறேன்...

**தினுஷா மகாலிங்கம்**

## ஜென்கவிதை

வானத்து மழை
கடலிலும் பெய்யும்
ஓடும் நதியிலும் பெய்யும்
வற்றிப்போன நதியிலும் பெய்யும்
சிறு பள்ளத்தையும் நிரப்பும்
ஏன்?
பசுவின் கால்தடத்தையும்
நிரப்பும்..!!!

**- ஸ்ரீவி.முத்துவேல்**
சென்னை

# தொழில்நுட்பமும் இன்றைய சமூகமும்

**ஜன்னத் - மாவனல்ல**

இன்று தொழில்நுட்பத்தின் வளர்ச்சி உலகத்தையே அடிமைப் படுத்தி அனைவரும் அதற்கு சரணடைந்தவர்களாக ஆகிவிட்டோம். சிரமப் பட்டுக் கொண்டிருந்த மனிதன் இருந்த இடத்தில் இருந்தவாறே வேலைகள் அனைத்தையும் செய்து முடிக்கும் அளவிற்கு நிலைமை மாறி விட்டது.

காலையில் நேரகாலத்துடன் எழுந்து பரபரவென்று ஆபீசும் வேலைத் தளமுமாக சென்று கொண்டிருந்த மனிதன் வலைத்தளங்களினூடாக அனைத்தையும் செய்து முடிக்கும் அளவிற்கு ஆற்றலைப் பெற்றுள்ளான். இதைப் பார்க்கும் போது ஓடித் திரிந்த மனிதருக்கு ஓய்வு எடுக்கவும், இதர காரியங்களில் ஈடுபடவும் நேரத்தை மிச்சப் படுத்திக் கொள்ளும் சூழல் ஏற்பட்டு இருக்கின்றது என்றுதான் கூற வேண்டும்.

அன்றைய கால நிலவரம் எவ்வாறென்றால் சாதாரண தரம் படித்து உயர்தரத்தில் ஏதோ ஒரு பிரிவில் சேர்ந்து விட்டு அதன் பிறகு என்ன செய்யலாம் என்கின்ற போதிய அறிவு இல்லாமலும் அதைப் பற்றிய ஆலோசனை வழங்கக் கூடியவர்கள் இல்லாமையுமான நிலைமை காணப் பட்டது. மேலும் கற்றது போதும் அடுத்து திருமணம்தான் என்ற எண்ணமும் தான் ஆழமாக பதியப் பட்டிருந்தன. அதுகூட இந்த தொழில் நுட்ப வளர்ச்சியின் மூலம் சிறந்த தகவல்கலைப் பெற்று தமது இலக்கை அடைந்து கொள்ள சிறந்த வழிகாட்டியாக அமைந்துள்ளதை எம்மால் உணர முடிகின்றது.

இவ்வாறு தொழில்நுட்ப வளர்ச்சியின் மூலம் முன்னேறிச் செல்கின்ற அதே வேளை மற்றொரு பிரிவினர் அதன் தீயவிளைவுகளின் விபரீதங்களைப் பற்றி அறிந்தும், அறியாமலும் தவறான முறையில் பயன் படுத்திக் கொண்டு இருப்பதை அவதானிக்க முடிகின்றது. கட்டிளம் பருவ வயதுடையவர்கள் ஒருபுறம் இருக்க வயதிற்கு வந்த, திருமணமானவர்கள், தனது பொழுதுபோக்கிற்காகவும், தனிமையை போக்குவதற்காகவும் பயன் படுத்தி வருகின்றனர். இவ்வாறு தவறான செயற்பாடுகளால் ஒழுக்கம், இஸ்லாம் கூறும் வரையறைகளை மீறி சமூகம் தடம் மாறிப் போய்க் கொண்டு இருக்கிறார்கள்.

ஆரம்ப காலங்களில் தொழில் நுட்ப வளர்ச்சியும் இல்லை பாரிய, கொள்கைகளின் வளர்ச்சியும் இல்லை, மக்கள் பசியோடு வாழ்ந்தாலும் மானத்தை பேணிக் காத்தவர்களாகவே வாழ்ந்தார்கள். அறியாமல் இழைத்த தவறுக்காக மனமுருகி வருந்திய சமுதாயத்தை அவதானிக்க முடிந்தது. இப்போதெல்லாம் மானத்தைப் பற்றிய எந்த கவலையும் இல்லை எங்களை எல்லாரும் ரசிக்க வேண்டும், புகழ வேண்டும் என்கின்ற எண்ணத்தில் அலங்கரித்துக் கொண்டும் கூச்சமில்லா சமுதாயம் உருவாகி இருப்பதை காண்கின்றோம்.

மேலும் முக நூல் நண்பர்களாக,

இன்ஸ்டகிராம் நண்பர்களாக அற்ப இன்பத்துக்காக கீழ்த்தரமான செயல் களைப் புரிந்து இல்லற வாழ்க்கை யில் திருப்திகரமாக இல்லாமல் சந்தேகத்தோடும் சிக்கலோடும் வாழும் குடும்பங்கள் அதிகமாகி விட்டன. ஆண்களும் சரி பெண்களும் தனி மையை விரும்புகின்றனர், காரணம் இது போன்ற தவறிழைக்கக் கூடிய சூழலையே தேடுகின்றனர். இவ்வாறு வலைத்தளங்களில் இருக்கக் கூடிய நண்பர்களை நம்பி அனைத்தையும் பகிர்ந்து கொண்டு இறுதியில் உளவள வாளர்களையும், காதிக் கோடு களையும் தேடி அலைகின்றனர். இஸ்லாமிய வரையறைகளை மீறி எல்லையற்ற அவமானங்களுக்கு காரணமானவுடன் முறையற்ற காரணங்களை சொல்லித் தப்பிக்க முயற்சிப்பதோடு மனைவியை கண வனும் கணவனை மனைவியும் குறை சொல்ல ஆரம்பிக்கின்றனர். இதன்காரணமாக சந்தோஷமாக வாழ்ந்து வரும் குடும்பங்களில் பிளவு கள் ஏற்பட வழிவகுக்கப் படுகின்றது.

அன்பார்ந்த நெஞ்சங்களே ஒரு பெண்தான் இன்னொரு பெண் ணிற்கு எதிரியாகின்றாள். ஆணின் மயக்கமான பேச்சிற்கு பெண்ணும், பெண்ணின் ஆபாசமான செயல் களுக்கு ஆணும் மதிமயங்கி உண்மை யான உள்ளங்களை நோகடித்து வாழ்வதன் பயன்தான் என்ன?

திருமண வாழ்கை என்பது இரண்டு உள்ளங்கள் நம்பிக்கை எனும் கயிற்றால் இணைக்கப் பட்டுள்ளதாகும். ஒவ்வொருவரும் புரிந்துணர்வோடும், சகிப்புத்தன்மையோடும் உணர்வுகளுக்கு மதிப் பளித்து வாழ்வதன் மூலமே சிறந்த தொரு குடும்பமொன்றை உருவாக்க முடியும். இவ்வாறான சீர்கேடுகளால் வாழ்க்கையில் நஷ்டமடைந்தவர்களாக வும், பிறர் வாழ்க் கையை கெடுத்த பாவிகளாக மாறுவதிலிருந்தும் தவிர்ந்து கொள் வோமாக!

---

# வெற்றிக்கான படிகள் சில

*வாழ்க்கை பயணத்தில் எப்போதும் விழித்தபடி இருக்க வேண்டும்!*
*இல்லையெனில் இங்கு வெகு சுலபமாக வீழ்த்தப்படுவோம்!*
*பல நேரங்களில் உறவுகளால் காயப்பட்டு உணர்ந்திருப்பீர்கள்!*
*மற்றவர்களின் சுயலாபத்திற்கு பகடைக்காயாக மாறாதீர்கள்!*
*உங்களின் பலம் பலவீனம் அவர்களுடன் பகிராதீர்கள்!*
*வில்லங்கத்தை விருந்துவைத்து அழைப்பதற்கு சமம் அது!*
*உங்களின் ரகசியத்தை மற்றவருக்கு ஒப்பிக்காதீர்கள்!*
*உங்களால் காப்பாற்ற முடியாத ரகசியத்தை*
*மற்றவர்கள் எப்படி காப்பாற்றுவார்கள்!*
*முன்பேசி பின்தூற்றும் மனிதர்களின் உறவுகளை தள்ளிவையுங்கள்!*
*வசந்தம் உங்கள் வாசல் வரும் நம்புங்கள்!*

*Navyasri Pradeepa Dayalan*

# அவள்

புரியா நேசத்திற்காய் புரண்டு அழுதவள் அவள் இன்று அப்பாழாய்ப் போனநேசத்தைஅலட்சியப்புன்னகை யோடு கடக்கின்றாள்.

துரோகத்தின் முட்களால் குத்திக் கிழிக்கப்பட்டு வலித்தவள் அவள் இன்று அத்துரோகத்திற்காய் மிகையாய் மகிழ்கின்றாள்.

நிராகரிப்பிற்காய் நிர்க்கதியா னவள் அவள் இன்று அந்நிராகரிப் பினாலேயே பெரும் விருட்சம் காண்கின்றாள்.

பல அவமானங்களால் அவதிப் பட்டு அகமுடைந்தவள் அவள் இன்று அனைவர் முன்னும் அழகாய் புன்னகைக்கின்றாள்.

தோல்விகளால் துவண்டு விழுந்த வள் அவள் இன்று வேள்வித் தீயாய் சுடர் விட்டு எரிகின்றாள்.

இனி; உலகத்துக்கவலைகள் அவளை கலங்கச் செய்திடப் போவதில்லை.

கேலி வார்த்தைகள் அவளை நொறுங்கச் செய்திடப் போவதுமில்லை.

சுவனத்துக் காதலோடும்; ஈமானிய உறவுகளோடும்; நாளங்களுக்குள் கசிந் தூறும் தீராத தக்வாவோடும்; பிரார்த் தனையால் பிரகாசிக்கும் உறுதியான தவக்குலோடும்; இரும்பென உறுதி காண்கின்றாள் அவள்! அரும்பென பூக்கும் பூமுகக்காரி!

**பாத்திமா ஹகீமா அமீனுதீன்**
ஓட்டமாவடி

# மழைக்காதல் நீ

வானமும் பூமியும் இணையும்
மழைக்காதல்- நீ
காதல் நிலவே!
தூரத்திலிருக்கும்
என்-நெருங்கிய சொந்தம் நீதான

உன் நினைவுகளோடு
உறங்கச்சென்றேன்...
விழித்துக் கொண்டது
என்னுறக்கம்

பள்ளத்தை நோக்கிப் பாயும்
வெள்ளமா நீ
உன்னால் பள்ளமானது உள்ளம்
தேங்குகின்றனவே அதிலுன்
நினைவுகள்

மழைக்கால இரவின் கதகதப்பாய்
மல்லிகையின் மணமாய்
இதயத்தில் சர்க்கரை தூவும்
இதமாய் உன் ஞாபகங்கள்

ஆழ்ந்த உறக்கத்தில் சிரிக்கும்
சிணுங்கும் பிள்ளை போல
மனதில் உன்னால் எத்தனையோ
இன்பத்தின் சேட்டைகள்

காகிதங்கள் கடிதங்கள் எரிந்தாலும்
மீண்டும் மீண்டும் வாசித்த
வண்ணமிருக்கின்றதே
உன் வரிகளை இதயம்

உண்மையை அறிகிறேன்
உண்மையைப் பேசுகிறேன்
ஆயினும் நீ என்னோடு
நீ எனது என்ற பொய்யை
இப்போதும்
நம்பிக்கொண்டிருக்கிறேன்

**Dr ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர், இலங்கை

# வீறு கொண்டு எழு பெண்ணே!!

மனிதியென்ற பெயருக்கு
அடிமையென்று பொருளில்லை-அட
விதியென்று வாழ்ந்திடவே -நாங்க
உங்க கைப்பொம்மை யல்ல

அடுப்படியில் புகையூத
கதவடியில் மறைஞ்சு நிக்க
எமைப் படைக்கவில்லை இறைவன்
விலங்குடைக்கவேது தடைகள்

மழலையில்லா பெண்ணையிங்கு
மலடென்போர் மடையர் -ஒரு
விடையறியா கேள்வியாய் நாம்
வாழ்வதுவே வலிகள்

எமை எள்ளி நகையாடுவோரை
முளையில் கிள்ளியே தான் எறிவோம்
தள்ளி நின்ற தீட்டை யெல்லாம்
விரல்ச் சாட்டை கொண்டு எதிர்ப்போம்

ஆணாதிக்க மிடுக்கையெல்லாம்
கால் இடுக்கினிலே நசுக்க
பெண்ணென்ற பெரும் தீயாய்
வேள்வியொன்று சமைப்போம்

பரம்பரையை வளர்த்து விடும்
இயந்திரமாய் நாங்கள்
மண்மீது வாழ்ந்த கதை
போதுமடா போதும்

உங்கள் அனுதாபம்
கருணையெல்லாம்
இனித் தேவையில்லை போடா
விடுகதையாய் நாமிருந்த
நாட்கள் இனியில்லை
விடுதலைக்காய் தலையெடுத்தோம்
வீறு நடை பயில்வோம்

மடை திறந்த வெள்ளமாய் எம்
கண்ணீர் ஓலமது காணும்-இனி
ஓயாது எம் புகழை
தரணி பாட வேணும்
விண்வெளியில் போர்ப்படையில்
பேர் பொறித்த போதும்
வாயார வாழ்த்தவொரு
நாதியிங்கு யில்லை
பாலினத்தின் பேதமையில்
நாம் சிறகுடைந்த கிள்ளை.

கொல்லையிலே முடங்கிடவே
பிறவி எடுக்க வில்லை.
திறமை உண்டு ஆயிரங்கள்.
தொடுவோம் வானின் எல்லை!!!!

**சோதிகா.ரெ**
**(ஆகிஷா.$)**
கொக்குவில்

முத்தமிழ் கலசம்
ISSN 2719 - 2520
இருமாதத்திற்கொருமுறை
மார்ச் - ஏப்ரல் 2023
ஆண்டு 3 ▲ இதழ் 05


# மனிதி.

நேசம் தனை வளர்த்திடவும் பெண்வேண்டும்
தேசம் தனை வளர்த்திடவும் பெண்வேண்டும்.
நாசம் செய்து மோசம் செய்து வீசும் போதும்
நாளை வலியில் துடிக்கையில் அம்மா என்றழைக்கவும்
எல்லோர்க்கும் எப்போதும் எங்கேனும் பெண் வேண்டும்.

பாசம் என்ற போர்வையிலே பெண் போதையாகினாள்
பார்வைகளே பிழைத்திடவும் பாவை பேதையாகினாள்
நேர்வழியில் நடந்திடவே நாளும் அவளும் நாடினாள்
நாங்கள் அவளை இரையாய் பார்க்க அவளும் ஓடினாள்.

வாழும் வழிகள் யார்க்கும் பொது என்றே முழங்குவோம்
அவள் வாழ வழியை விட்டால் தானே நாமும் உயருவோம்
தீதும் நன்றும் நம்மில் நின்று தொடங்குவது தானே
வாதை அவளை நெருங்கிடாது பாதை செய்திடுவோம்.

சேயுமாகி செல்வ குமரியாகி தாரமாகி பின் தாயுமாகி
நீயுமாக அவள் பாயும் ஆகி ஆவி நோக நோயில் வேகி
தீயுமாகி பெண் தீபமாகி தூய அன்பில் ஓர் தூபமாகி
நேற்றுமாகி இன்றுமாகி நாளையாகி உந்தன் வாழ்வுமாகி
போற்றும் பெண்மை சோதியாகி பெருந்துணை பாதியாகி
ஆதியாகி அன்பின் நீதியாகி ஆளும் ஆளுமைநிறை
மனிதியாகி நிற்கும் பெண் மனிதி - தியாகி.

- R.J.பிரகலாதன் (பிரகவி)